விலை: 50.00
பக்கங்கள் : 16

website : www.valampurii.lk
viber : 076 636 3378

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com

சங்கு 24

ஒலி 206 வள்ளுவர் ஆண்டு 2054 ஆனி 28 வியாழக்கிழமை (13.07.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை



T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## பாரதப் பிரதமருக்கான கடிதத்தில் கட்சித் தலைவர்கள் கையொப்பம்

### இன்று இந்தியத் தூதுவரிடம் கையளிக்கப்படும்



(யாழ்ப்பாணம்)

பாரதப் பிரதமர் மோடிக்கான கடிதத்தில் கட்சித் தலைவர்கள் நேற்று கையொப்பம் இட்டுள்ளனர்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விரை 16

## யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் தெரிவு

### மூவரின் பெயர் பரிந்துரை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பதவிக்கான தெரிவு நேற்று (12) இடம்பெற்றது.

இதனடிப்படையில் துணைவேந்தர் பதவிக்கு விண்ணப்பித்திருந்த நான்கு பேரில் பேராசிரியர் சிறீசற்குணராஜா - 76.8 புள்ளிகள், பேராசிரியர் தி.வேல்நம்பி - 74.9 புள்ளிகள், பேராசிரியர் செ.கண்ணதாசன் - 57.7, பேராசிரியர் பி.வினோபாபா - 57.5 15

## 'இந்த மண் எங்களின் சொந்த மண்'

# கடற்படையே வெளியேறு

### மண்டைதீவில் காணி சுவீகரிப்புக்கு எதிராக பொதுமக்கள், மக்கள் பிரதிநிதிகள் போராட்டம்





(மண்டைதீவு) மண்டைதீவில் கடற்படையினருக்காக பொதுமக்களின் காணி சுவீகரிப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து பொதுமக்கள், மக்கள் பிரதிநிதிகள் நேற்று போராட்டத்தில் ஈடுபட்டனர். (16ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். - கொழும்பு ரயில் சேவை

### ஆசன முன்பதிவு ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - கொழும்பு ரயில் சேவைக்கான ஆசன முன்பதிவு மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்துக்கும்கொழும்புக்கும் இடையிலான ரயில் சேவைகள் எதிர் வரும் சனிக்கிழமை 15

### மறவன்புலோவில்

## விபரீத முடிவெடுத்த இளம் தாய் மரணம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி மறவன்புலோவில் விபரீத முடிவெடுத்த இளம் தாய் ஒருவர் மரணமடைந்துள்ளார்.

நேற்று புதன்கிழமை பிற்பகல் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குடும்பத் தகராறு காரணமாக அலரி 15

### காணி கேட்டு போராடியவர்களுக்கு


## பிஸ்கட், குளிர்பானம் வழங்க வந்த கடற்படை



16

## விவசாயிகளை மறந்துவிட்டு பொருளாதாரத்தை வளர்க்க முடியாது

### பிரதமர் தினேஷ் குணவர்த்தன



(கொழும்பு)

விவசாயிகளை மறந்துவிட்டு பொருளாதார வளர்ச்சியை எட்ட முடியாது என பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

விவசாயிகளை ஏற்றுமதி இலக்குடன் வளர்ச்சிப்பாதைக்கு அழைத்து செல்லும் உள்ளூர் விதை விநியோக நிகழ்வு மாவத்தகம மீபேயில் நேற்று பிரதமர் 15

## யாழிலிருந்து ஹெரோயின் கடத்தியவருக்கு மரண தண்டனை

### நீதிபதி இளஞ்செழியன் தீர்ப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கி விற்பனைக்காக 1 கிலோ 135 கிராம்ஹெரோயின் போதைப்பொருளை கொண்டு சென்ற நாவற்குழியைச் சேர்ந்த 55 வயதுடைய குடும்பஸ்தருக்கு 6 வருடங்களின் பின் வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் மரண தண்டனை வழங்கி தீர்ப்பளித்தார்.

கடந்த 2017ஆம் ஆண்டு நவம்பர் 15

### 53 மில்லியன்

## பெறுமதியான மருந்துகள் இலங்கைக்கு

(கொழும்பு)

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங், சிறுகுழந்தைகளுக்குத் தேவையான புற்றுநோய்க்கான மருந்துகள் 16

### வனவள திணைக்களம் அடாவடி

## குடிசை பிடுங்கி எறிந்து பெண்கள் மீதும் தாக்குதல்

### முல்லை கைவேலியில் சம்பவம்



02

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# வெற்றி தமக்கு கிட்டாது என்பதாலேயே தேர்தல் கனி புளிக்கும் என்கிறது அரசு

## ஐ.ம.ச. கடும் சாடல்

(கொழும்பு)

தங்களுக்கு வெற்றி கிடைக்காது என்ற காரணத்தினால் தான், உள்ளூராட்சி மன்றத் தேர்தலை அரசாங்கம் பிற்போட்டுள்ளது என பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் மத்தும பண்டார குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரஞ்சித் மத்தும பண்டார தலைமையிலான குழுவினர் தேர்தல் ஆணைக்குழுவிற்கு விஜயமொன்றை மேற்கொண்டதன் பின் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

"உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காக வேட்பாளராக களமிறங்கிய, அரச ஊழியர்களின் சம்பளம் இல்லாது போயுள்ளது.

அரசாங்கத்தின் தவறினால் தான் தேர்தல் பிற்போடப்பட்டுள்ளது. இந்த நிலையில், அரச ஊழியர்களின் விடுமுறையும் ரத்தாகியுள்ளது.

சிலர் விடுமுறை எடுத்த காரணத்தினால், அவர்களின் சம்பளம் குறைக்கப்பட்டுள்ளது.

நிதியில்லாத காரணத்தினால்தான் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்தவில்லை என்று அரசாங்கம் கூறுகிறது.

மறுபுறம், நாட்டில் போதியளவு நிதி உள்ளதாகவும் பொருளாதாரம் வலுவடைந்து வருவதாகவும் அரசாங்கம் கூறுகின்றது.

இதிலிருந்தே, தங்களுக்கு வெற்றி கிடைக்காது என்ற காரணத்தினால்தான், உள்ளூராட்சி மன்றத் தேர்தலை அரசாங்கம் பிற்போட்டுள்ளது என்பது தெளிவாகிறது" என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

# ஆட்டோக்களில் தேவையற்ற அலங்காரங்களுக்கு

## விசேட கட்டணம் அறவிடப்படும்

வீதியால் பயணிப்போருக்கு இடையூறு விளைக்கும் வகையில் முச்சக்கரவண்டிகளில் மேலதிக பொருட்களை கொண்டு அலங்கரிக்கும் செயற்பாட்டுக்கு இனிமேல் கட்டணம் அறிவிடப்படவுள்ளது.

முச்சக்கரவண்டிகளை மேலதிக பொருட்களை கொண்டு அலங்கரிப்பதற்காக கட்டணம் அறவீட்டின் கீழ் அனுமதி வழங்குவதற்கு மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இது தொடர்பில் அறிக்கை ஒன்றை விடுத்துள்ள அந்த திணைக்களம், முச்சக்கரவண்டி சங்கங்களின் தொடர்ச்சியான கோரிக்கைக்கு அமைய குறித்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளது.

இதன்படி, வீதியில் பயணிப்போருக்கு அனர்த்தம் அல்லது இடையூறு ஏற்படுத்தும் வகையிலான அலங்கரிப்புக்கு உதாரணமாக முச்சக்கரவண்டியின் பின்புறத்தில் அலுமினியத்திலான ஏணியை பொருத்தின் ஆயிரம் ரூபா தண்டமாக அறவிடப்படும் என அந்த திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

# அரச நிறுவனங்களை மறுசீரமைக்க அமைச்சரவை அங்கீகாரம்

இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனம், லிட்ரோ எரிவாயு நிறுவனம் உள்ளிட்ட 4 நிறுவனங்களை மறுசீரமைப்புக்கு உட்படுத்துவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அதற்கமைய, குறித்த பணிகளுக்காக சர்வதேச போட்டிக் கொள்முதல் முறைமையைப் பின்பற்றி, பரிவர்த்தனை ஆலோசகர்களைத் தேர்ந்தெடுப்பதற்காக, அக்கறை வெளிப்பாட்டு கூற்று மற்றும் முன்மொழிவுகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தன.

அமைச்சரவையால் நியமிக்கப்பட்டுள்ள நிரந்தர பெறுகை குழுவால் குறுகிய பட்டியல் படுத்தப்பட்ட முன்மொழிவுகளின் தரப்பண்பு மற்றும் செலவுகளின் அடிப்படையிலான தெரிவு பொறிமுறையை பின்பற்றி குறித்த நான்கு நிறுவனங்களுக்கான பரிவர்த்தனை ஆலோசகர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

இதன்படி, தெரிவு செய்யப்பட்ட பரிவர்த்தனை ஆலோசகர்களுடன் தொடர்புடைய உடன்படிக்கைகளை மேற்கொள்வதற்காக நிதி, பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கை அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதியினால் முன்வைக்கப்பட்ட பிரேரணையை அமைச்சரவை அங்கீகரித்துள்ளது. (ம-7)

# செப்டெம்பரே முதலாவது மீளாய்வு அதுவரை IMF கொள்கை மாறாது

## நிதி இராஜாங்க அமைச்சர்

(கொழும்பு)

சர்வதேச நாணய நிதியத்தின் முதலாவது மீளாய்வு எதிர்வரும் செப்டெம்பர் மாதம் நடத்தப்படும் என இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

இந்த மீளாய்வு இடம்பெறும் வரையில் தற்போதுள்ள சீர்திருத்தங்களை மாற்ற முடியாது எனவும் அவர் குறிப்பிட்டார்.

அதேநேரம் ஊழல் ஒழிப்பு சட்டமூலம் அடுத்த பாராளுமன்ற அமர்வில் நிறைவேற்றப்படும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க மேலும் தெரிவித்துள்ளார். (ம-7)

## குடிசை...

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கைவேலி பகுதியில் வனவள திணைக்கள அதிகாரிகள் முன்னாள் போராளி உள்ளிட்டவர்களின் வீடுகளை உடைத்தெறிந்து பெண்கள் மீதும் தாக்குதல் நடத்தியதாக பொதுமக்கள் குற்றம் சுமத்தியுள்ளனர். நேற்று மதியம் இச் சம்பவம் இடம் பெற்றது.

இந்த விடயம் குறித்து மேலும் தெரியவருகையில்,

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கைவேலி பகுதியில் 2000 ஆம் ஆண்டு காலப்பகுதியில் விடுதலைப் புலிகள் அமைப்பின் 45 குடும்பங்களுக்கு வீட்டுத்திட்டம் வழங்கப்பட்டு குறித்த பகுதியில் 45 குடும்பங்கள் குடியேறி இருந்தனர் இந்நிலையில் 2009 ஆம் ஆண்டு யுத்தம் முடிவுக்கு வந்தபோது குறித்த பகுதியை விட்டு மக்கள் சென்ற பின்னர் குறித்த பகுதியில் இருந்த குடும்பங்கள் மீள்குடியேற்றம் வரவில்லை பலர் உயிரிழந்தும் வேறு சிலர் வேறு இடங்களில் குடியேறிவிட்டனர் இவ்வாறான நிலை குறித்த கிராம மக்கள் 2012 ஆம் ஆண்டு கைவேலி பகுதி மீள்குடியேற்றம் செய்யப்பட்டு குறித்த பகுதியை வன திணைக்களம் எல்லைக் கற்கள் இட்டு வனப்பகுதியாக் கிவிட்டனர்.

இவ்வாறான பின்னணியில் மக்கள் வாழ்ந்த வீடுகள், கட்டு கிணறுகள், கட்டடங்கள், பயன் தரு மரங்கள் உள்ள குறித்த கைவேலி பகுதியில் காணிகள், வீடுகள் அற்ற சுமார் 20 குடும்பங்கள் பல காலமாக குடியேறிவாழ முயற்சித்து வந்த நிலையில் தற்போதைய பொருளாதார நெருக்கடியில் தமது குடும்பங்களை கொண்டு நடத்த முடியாத நிலையில் வாடகை வீடுகளில் இருக்க முடியாத நிலையில் குறித்த 45 வீட்டுத் திட்டப் பகுதியில் சென்று கொட்டில்களை அமைத்து குடியேறியுள்ளனர்.

இந்நிலையில் நேற்று மதியம் குறித்த பகுதிக்கு சென்ற வனவள திணைக்கள அதிகாரிகள் அங்கு மக்கள் போட்ட கொட்டில்களை அகற்றி கொழுத்துவதற்காக மண்ணெண்ணையுடன் வருகை தந்ததாகவும் பெண்கள் தனிமையில் இருந்த கொட்டில்களில் சென்று முன்னாள் போராளியான பெண் ஒருவர் மீதும் ஆண் ஒருவர் மீதும் தாக்குதல் நடத்தியதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

குறித்த இருவரும் தற்போது புதுக்குடியிருப்பு ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்

இதேவேளை வனவள திணைக்கள அதிகாரிகள் கொண்டு சென்ற மண்ணெண்ணையை பறித்து அங்கு இருந்த நபரொருவர் தன்மீது ஊற்றி தீக்குளிக்க முற்பட்டு மக்களால் காப்பாற்றப்பட்டுள்ளார்.

இவ்வாறான பின்னணியில் சம்பவ இடத்திற்கு புதுக்குடியிருப்பு பொலிஸ் பொறுப்பதிகாரி மற்றும் பொலிஸார் சென்று புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் அவர்களுடன் தொடர்புகொண்டு கலந்துரையாடி குறித்த மக்களுக்கு உரிய தீர்வை பெற்றுத் தர நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தார். (ம-7)

# தரம் ஒன்றுக்கான மாணவரனுமதி சுற்றுநிருபம் இன்று வெளியாகும்

## கல்வி அமைச்சு

(கொழும்பு)


2024 ஆம் ஆண்டு தரம் ஒன்றுக்கான மாணவர்களை அனுமதிக்கும் சுற்றறிக்கையை கல்வி அமைச்சு இன்று வெளியிடவுள்ளதாக அறிவித்துள்ளது.

குறித்த சுற்றறிக்கையில் 2024 ஆம் ஆண்டுக்கான தரம் ஒன்று அனுமதி தொடர்பான விவரங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

அனுமதிக்கு விண்ணப்பிக்கும் போது பெற்றோர்கள் சுற்றறிக்கையின் வழிமுறைகளைப் பின்பற்ற வேண்டும் என்றும் இது மாகாண மற்றும் தேசிய மட்டத்தில் உள்ள அனைத்து பாடசாலைகளுக்கும் பொருந்தும் எனவும் கல்வி அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (ம-7)

# இனப்பிரச்சினைக்கான தீர்வில் சம்பந்தன் இரட்டை நிலைப்பாடு

## சித்தார்த்தன் எம்.பி தெரிவிப்பு



(கொழும்பு)

இலங்கையில் தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்கான தீர்வாக 13 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தும் விடயத்தில் இரா.சம்பந்தன் இரட்டை நிலைப்பாட்டுடன் உள்ளதாக ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டமைப்பை பிரதிநிதித்துவப்படுத்தும் புளொட்டின் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

தமிழ் மக்களின் இனப் பிரச்சினைக்கான இறுதித் தீர்வான சமஷ்டி நோக்கிய நகர்வின் முதல் படியாக 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என இந்தியப் பிரதமர் நரேந்திர மோதியை தாம் கோரியுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

13 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தை நடைமுறைப்படுத்துமாறு கோரும் தமது தீர்மானத்தின் பின்னணியில் இந்தியா இருப்பதாக முன்வைக்கப்படும் விமர்சனங்களையும் தர்மலிங்கம் சித்தார்த்தன் நிராகரித்துள்ளார்.

13 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தை கோரும் கடிதத்தில் தாம் கையெழுத்திடப் போவதில்லை என இரா.சம்பந்தன் தற்போது கூறியதாகவும் தர்மலிங்கம் சித்தார்த்தன் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனினும் இதற்கு முன்னர் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு, 13 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் எனக் கோரி அனுப்பப்பட்ட கடிதத்தில் இரா.சம்பந்தனும் கையெழுத்திட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார். (ம-7)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஈழத்தில் கண்டுபிடிக்கப்படும் புதைகுழிகள்

# பேரினவாத அரசின் இரத்தவெறி அம்பலம்

## இனியாவது தமிழர்களுக்கு நீதி கிடைக்க உலக நாடுகளை இந்தியா ஒன்று திரட்ட வேண்டும்

## தமிழர் வாழ்வுரிமைக்கட்சி வலியுறுத்து



(சென்னை)

**கொக்குதொடுவாயில் மனிதப் புதைகுழி கண்டுபிடிக்கப்பட்டுள்ள நிலையில் இனியாவது தாமதிக்காமல் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் விசாரணைகளை நடத்த ஐ.நாவும் உலக நாடுகளும் முன்வரவேண்டும் என தமிழர் வாழ்வுரிமை கட்சியின் தலைவர் வேல்முருகன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

உலக நாடுகளை ஒன்று திரட்ட மத்திய அரசாங்கத்திற்கு தமிழக அரசாங்கம் போதிய அழுத்தம் கொடுக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

தமிழீழத்தில் 2008-2009 ஆம் ஆண்டில் இலட்சக் கணக்கான தமிழர்களைச் சிங்களப் படை கொன்று குவித்தது.

குறிப்பாக, சிங்களப்படையின் குண்டு வீச்சிலிருந்து உயிர்தப்ப, பதுங்கு குழிகளுக்குள் ஒன்றன் மேல் ஒன்றாகப் பலநாள் படுத்திருந்த சிறுவர்கள் பட்டினியால் துடித்துத் துடித்துச் செத்துப் போனார்கள்.

உயிர் பிழைக்க வெட்டப்பட்ட பதுங்கு குழிகள் அவர்களின் மரணக் குழிகள் ஆயின. அடுக்கப்பட்டது போல், கிடந்த அச் சிறுவர்களின் பிணங்களை அப்படியே மண்போட்டு மூடினார்கள்.

சிறுவர்கள் மட்டுமல்ல, பெரியவர்களும் இப்படித்தான் பதுங்கு குழிகளுக்குள் படுத்து மரணத்தைத் தழுவினர்.

வெற்றிவாகை சூடிக்கொண்டதாக ராஜபக்ஷ அரசு அறிவித்த அந்தக் கடைசி இரு நாட்களில் உயிர்காக்க அங்குமிங்கும் அலமந்து ஓடிய மக்களை எறிகணைகளாலும் எந்திரத் துப்பாக்கிகளாலும் குறி இலக்கு எதுவுமின்றி கைபோன போக்கில், கண்போன போக்கில் சுட்டுப் பல்லாயிரக்கணக்கானோரைப் பிணமாக்கினர். படுகாயமுற்று மருந்தின்றி துடித்துத் துடித்துச் செத்தோர் பல ஆயிரம் பேர்.

இத்துயரத்தை எண்ணி கலங்கிய உலகெங்கும் வாழும் தமிழர்கள், தமிழீழ மக்களுக்கு எதிரான இனப்படுகொலைப் போர் குறித்தும் அதன் விளைவுகள் குறித்தும் உலக அளவில் ஏற்புடைய புகழ்பெற்ற நீதிபதிகள் குழு ஒன்றின் தலைமையில் புலனாய்வும் விசாரணையும் நடத்த ஐ.நா முன்வர வேண்டும் என கோரிக்கை விடுத்தனர்.

ஆனாலும், ஐ.நாவும் முன்வரவில்லை. வழக்கம் போல் இந்தியா ஒன்றிலும் கவலை கொள்ளவில்லை.

ஏனென்றால், செத்தவர்கள் தமிழர்கள், காணாமல் போனவர்கள் தமிழர்கள்.

இந்நிலையில், முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாய் பகுதியில் கடந்த 29 ஆம் திகதி குழாய் நீர் பொருத்தும் பணிகளுக்காக குழியொன்று தோண்டப்பட்ட போது, கொத்து கொத்தாக பெண்களின் உள்ளாடைகள் மற்றும் மனித எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

ஏற்கனவே, இலங்கையின் பல்வேறு பகுதிகளில் பல்வேறு சந்தர்ப்பங்களில் கண்டு பிடிக்கப்பட்ட 20 இற்கும் மேற்பட்ட "மனித புதைகுழிகள்" தொடர்பான விசாரணைகள் நிறுத்தப்பட்டுள்ள நிலையில், தற்போது மனித எச்சங்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு - கொக்குத் தொடுவாய் பகுதி என்பது, 1984 ஆம் ஆண்டு முதல் 2011 ஆம் ஆண்டு வரையான காலம் வரை முழுமையாக இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருந்தவை.

இறுதிப் போரின் போது, பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் இராணுவத்திடம் சரணடைந்ததாகவும் அவ்வாறு சரணடைந்தவர்கள் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டுள்ளதாகவும் அச் சமயத்தில் குற்றச்சாட்டு எழுந்தது.

இந்த குற்றச்சாட்டுக்களை இராணுவம் தொடர்ச்சியாக நிராகரித்து வருகின்றது.

இச்சூழலில், முல்லைத்தீவு -கொக்குத்தொடுவாய் பகுதியில், மனித எச்சங்கள் கண்டு பிடிக்கப்பட்டிருப்பது வாயிலாக, சிங்கள பௌத்த பேரினவாத அரசின் இரத்த வெறி அம்பலப் பட்டுள்ளது.

எனவே, இனியாவது தாமதிக்காமல், மனித உரிமை மீறல்கள் தொடர்பாக விசாரணை நடத்த ஐ.நாவும் உலக நாடுகளும் முன்வர வேண்டும். உலக நாடுகளை திரட்ட ஒன்றிய அரசுக்கு, தமிழ்நாடு அரசு போதிய அழுத்தம் கொடுக்க வேண்டும் என்று தமிழக வாழ்வுரிமைக் கட்சி வலியுறுத்துகிறது என அவர் தெரிவித்தார். (நி-5)

# 95-110 ரூபாய்க்கு நெல் கொள்வனவு செய்யப்படும்


## விவசாய அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் சிறுபோகம் மற்றும் பெரும்போக பருவ காலங்களில் அறுவடை செய்யப்பட்ட நெல்லை கிலோ 95 ரூபாய் மற்றும் 110 ரூபாய்க்கு இடையில் கொள்வனவு செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

நிதி அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் அடிப்படையில் நெல் சந்தைப்படுத்தல் சபை நெல்லை கொள்வனவு செய்யும் என விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

ஒரு கிலோ நெல்லை 100 ரூபாய்க்கு கொள்முதல் செய்ய வேண்டும் என பல்வேறு விவசாய சங்கங்கள் அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ள நிலையில் ஒரு கிலோ நாட்டு மற்றும் சிவப்பு அரிசி நெல் 95 ரூபாய்க்கும் சம்பா 100 ரூபாய்க்கும் கீரிச்சம்பா நெல்லை 110 ரூபாய்க்கும் கொள்வனவு செய்ய விலை நிர்ணயம் செய்வதற்காக நியமிக்கப்பட்ட விசேட குழு பரிந்துரைத்துள்ளது. (நி-5)



## ஆய்வறிக்கை சமர்ப்பிக்க

# கனடா சென்ற இலங்கையர் விபத்தில் சிக்கி உயிரிழப்பு

(ஒட்டாவா)

அமெரிக்காவில் இருந்து கனடா சென்ற இலங்கையர் விபத்தில் சிக்கி பரிதாபகரமாக உயிரிழந்தார்.

கணனி பொறியியலாளரான அமெரிக்காவின் மேரிலாந்து பல்கலைக்கழகத்தில் கலாநிதி பட்டம் பெற கல்வி பயின்று வரும் வினோஜ் யசிங்க ஜயசுந்தர என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

இவர் கடந்த மாதம் 22ஆம் திகதி அமெரிக்காவில் இருந்து கனடாவின் வான்கூவர் நகருக்கு தனது கலாநிதி பட்டம் தொடர்பான ஆராய்ச்சி ஆய்வறிக்கையை வழங்க சென்ற போது விபத்தில் சிக்கி உயிரிழந்துள்ளார். (நி-5)

# ஓய்வூதியத்திற்கு முன்னரான கொடுப்பனவு இணையம் மூலம் அறிய வாய்ப்பு

## தொழில் திணைக்களம் அறிவிப்பு

(கொழும்பு)

ஊழியர் சேமலாப நிதிய உறுப்பினர்கள், ஓய்வூதியத்திற்கு முன்னரான, 30 சதவீத நன்மைக் கொடுப்பனவினை பெற்றுக் கொள்வதற்கான தகைமை குறித்து, இணையத்தளம் மூலம் அறிந்து கொள்ள முடியும் என தொழில் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன்படி, www.labourdept.gov.lk என்ற தொழில் திணைக்களத்தின் இணையத் தளத்தினை அணுகுவதன் மூலம் அந்தத் தகவல்களை அறிந்து கொள்ள முடியும்.

30 சதவீத நன்மைக் கொடுப்பனவினை பெற்றுக் கொள்ளவதற்கான தகுதியுடையவர்களா என்பதனை ஊழியர்கள் இதன் மூலம் அறிந்து கொள்ளலாம் என தொழில் திணைக்களம் தெரிவித்துள்ளது. (நி-5)

# நாட்டில் தீவிரமடையும் டெங்கு

(கொழும்பு)

நாட்டில் தற்போது நாளாந்தம் 200 டெங்கு நோயாளர்கள் மட்டுமே பதிவாகி வருவதாக சுகாதார அமைச்சின் தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவின் பணிப்பாளர் மருத்துவர் நளின் ஆரியரத்ன தெரிவித்தார்.

கடந்த ஆறு மாதங்களில் 51,768 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் 32 மரணங்கள் பதிவாகி உள்ளன.

இந்நிலையில், டெங்கு நோயைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சுகாதார வைத்திய அதிகாரியின் 48 பிரிவுகள் அதிக ஆபத்துள்ள பிரிவுகளாகவும் அதிகூடிய டெங்கு நோயாளர்கள் 25,835 பேர் மேல் மாகாணத்தில் பதிவாகியுள்ளதாகவும் மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் டெங்கு நோயாளர்கள் அதிகம் காணப்படுவதாகவும் தெரிவித்தார். (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சர்வதேச பளுதூக்கல் போட்டி

# வெண்கலப் பதக்கம் பெற்று வவுனியா மாணவி சாதனை



பொதுநலவாய நாடுகளுக்கிடையிலான பளுதூக்கல் போட்டிக்கு முதல் முறையாக வவுனியா மண்ணில் இருந்து மாணவி ஒருவர் தெரிவாகி வெற்றி வாகை சூடியுள்ளார்.

2023 ஆம் ஆண்டிற்கான அகில உலக பளுதூக்கல் போட்டிக்காக இலங்கையின் வடமாகாணம் வவுனியாவிலிருந்து 40 கிலோ எடை பிரிவில் 92 கிலோ தூக்கி 16 வயதையொட்டிய வவுனியா இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலய மாண்வி கோசியா திருமேனன் தெரிவாகி 11 - 16 ஆம் திகதி வரை டெல்லியில் நடைபெறவுள்ள போட்டியில் பங்கேற்க சென்று நேற்று இடம்பெற்ற போட்டியில் மூன்றாம் இடத்தினை பிடித்து வெண்கல பதக்கத்தினை பெற்றுள்ளார்.

இவர் வெற்றி பெற்று வடக்கு மாகாணத்திற்கு பெருமை சேர்த்துள்ளதோடு ஞானஜீவன் ஆசிரியரின் நெறிப்படுத்தலில் போட்டிக்கு சென்றிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (4-299)

3 ஆவது ஒருநாள் போட்டி

# ஆப்கானிஸ்தான் அணியை வீழ்த்தி பங்களாதேஷ் ஆறுதல் வெற்றி



ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் அணி பங்களாதேசத்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு விளையாடி வருகிறது. இரு அணிகளுக்கு இடையிலான ஒருநாள் தொடர் நடைபெற்றது. முதல் இரு போட்டிகளின் முடிவில் ஆப்கானிஸ்தான் அணி 2-0 என தொடரில் முன்னிலை வகிக்கிறது.

இந்நிலையில், இரு அணிகளுக்கு இடையிலான 3 ஆவது ஒருநாள் போட்டி சட்டோகிராமில் நேற்று முன்தினம் நடைபெற்றது. டாஸ் வென்று முதலில் பட்டிங் செய்த ஆப்கானிஸ்தான் அணி 45.2 ஓவரில் 126 ரன்களுக்கு ஓல்அவுட் ஆனது. அஸ்மத்துல்லா உமர்சாய் பொறுப்புடன் ஆடி அரை சதமடித்து 56 ரன்னில் அவுட் ஆனார்.

மற்ற வீரர்கள் நிலைத்து நிற்கவில்லை. பங்களாதேஷ் சார்பில் ஷோரிபுல் இஸ்லாம் 4 விக்கெட்டும் தஸ்கின் அகமது, தைஜுல் இஸ்லாம் தலா 2 விக்கெட்டுகள் வீழ்த்தினர். இதையடுத்து, 127 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் வங்காளதேச அணி களமிறங்கியது.

அந்த அணியின். கப்டன் லிட்டன் தாஸ் சிறப்பாக ஆடி அரை சதமடித்தார். ஷகிப் அல் ஹசன் 39 ரன் எடுத்தார்.

இறுதியில், பங்களாதேஷ் அணி 23.3 ஓவரில் 3 விக்கெட்டுக்கு 129 ரன்கள் எடுத்து அபார வெற்றி பெற்றது. லிட்டன் தாஸ் 53 ரன்கள் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தார்.


இதையடுத்து 3 போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரை 2-1 என்ற கணக்கில் ஆப்கானிஸ்தான் அணி கைப்பற்றியது.

ஆட்ட நாயகன் விருது ஷோரிபுல் இஸ்லாமுக்கும் தொடர் நாயகன் விருது பசல்ஹக் பரூகிக்கும் வழங்கப்பட்டது.

இவ்விரு அணிகள் இடையிலான முதல் இருபது-20 போட்டி நாளை ஆரம்பமாகவுள்ளது. (4)

# உலகக் கிண்ண தகுதிச் சுற்று போட்டி; சிறந்த அணிகளாக இலங்கை-நெதர்லாந்து ஐ.சி.சி அறிவிப்பு





50 ஓவர் உலகக் கிண்ண தொடருக்கான தகுதிச்சுற்று ஆட்டங்கள் ஜிம்பாப்வேயில் நடைபெற்று வருகின்றன.

இப்போட்டியில், இந்தியா, அவுஸ்திரேலியா, இங்கிலாந்து, நியூசிலாந்து, தென் ஆபிரிக்கா, வங்காளதேசம், பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் ஆகிய 8 அணிகள் தகுதி பெற்றுள்ளன.

மேலும் 2 அணிகளை தேர்வு செய்வதற்காக தகுதிச்சுற்று நடைபெற்றது. இந்தத் தகுதிச் சுற்று முடிவில் இலங்கை, நெதர்லாந்து அணிகள் இடம் பெற்றுள்ளன.


இந்நிலையில், சமூக வலைத்தளங்களில் உலகக் கிண்ண தகுதிச் சுற்று தொடரின் சிறந்த அணியை ஐ.சி.சி அறிவித்திருக்கிறது.

இலங்கை அணியைச் சேர்ந்த தொடக்க ஆட்டக்காரர்களாக பதும் நிசாங்காவும் நெதர்லாந்த் அணியைச் சேர்ந்த விக்ரம்ஜித் சிங் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

3 ஆம் இடத்தில் ஸ்கொட்லாந்து அணியைச் சேர்ந்த பிரண்டன் மெக்முல்லனும் 4ம் இடத்தில் ஜிம்பாப்வே அணியைச் சேர்ந்த சீன் வில்லியம்ஸும் 5ம் இடத்தில் நெதர்லாந்து அணியைச் சேர்ந்த பாஸ் டீ லீட்டும் 6 ஆம் இடத்தில் ஜிம்பாப்வேயைச் சேர்ந்த சிக்கந்தர் ராசாவும் 7 ஆம் இடத்தில் நெதர்லாந்தைச் சேர்ந்த ஸ்காட் எட்வர்ட்ஸ், 8 ஆம் இடத்தில் இலங்கை அணியைச் சேர்ந்த வனிந்து ஹசரங்கா,9 ஆம் இடத்தில் மகேஷ் தீக்சனாவும் 10 ஆம் இடத்தில் ஸ்காட்லாந்து அணியைச் சேர்ந்த கிறிஸ் சோல், 11 ஆம் இடத்தில் ஜிம்பாப்வே அணியைச்சேர்ந்த ரிச்சர்ட் ங்கரவா ஆகியோரும் தேர்வாகி இருக்கிறார்கள். (4)

மகளிர் கிரிக்கெட்

# நியூஸிலாந்து அணிக்கு எதிராக இலங்கை வரலாற்று வெற்றி



நியூஸிலாந்து மகளிர் அணி 3 ஒருநாள் போட்டி 3 இருபது-20 போட்டிகளில் விளையாடுவதற்காக இலங்கை சென்று. முதலில் நடந்த ஒருநாள் தொடரை 2-1 என்ற கணக்கில் இலங்கை அணி கைப்பற்றியது.

இதனையடுத்து இருபது-20 தொடர் நடைபெற்றது. முதல் இரண்டு போட்டிகளில் நியூஸிலாந்து அணி வெற்றி பெற்று தொடரை கைப்பற்றியது. இந்நிலையில் இரு அணிகளுக்கும் இடையேயான மூன்றாவது மற்றும் கடைசி இருபது -20 போட்டி நேற்று தொடங்கியது.

இதில் டாஸ் வென்ற இலங்கை அணி பந்து வீச்சை தேர்வு செய்தது. அதன்படி முதலில் பட்டிங் செய்த நியூஸிலாந்து அணி 20 ஓவர் முடிவில் 9 விக்கெட்டுகளை இழந்து 140 ரன்கள் எடுத்தது. இதனையடுத்து 141 ரன்கள் எடுத்தால் வெற்றி என்று களமிறங்கிய இலங்கை பெண்கள் அணி 14.3 ஓவரில் 143 ரன்கள் எடுத்து 10 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இதன்மூலம் இருபது-20 போட்டிகளில் முதன்முறையாக நியூஸிலாந்து அணியை வீழ்த்தி வரலாற்று வெற்றியை இலங்கை அணி பதிவு செய்துள்ளது.

அதிரடியாக விளையாடி இலங்கை பெண்கள் அணியின் கப்டன் சாமரி அத்தபத்து 80 ரன்கள் எடுத்து ஆட்டநாயகி விருதை தட்டிச்சென்றார். (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதப் புதைகுழி அகழ்வில் தலையிடுங்கள்

## நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் ஐ.நாவுக்கு கடிதம்

(லண்டன்)

முல்லைத்தீவில் அண்மையில் கண்டுபிடிக்கப்பட்ட பாரிய மனிதப் புதைகுழி அகழ்வுக்கு பொறுப்பெடுக்குமாறும் அதற்கு அங்கு விஜயம் செய்து கையகப்படுத்துமாறும் மனித உரிமைக்கான ஐக்கிய நாடுகளின் உயர்ஸ்தானிகர் வொல்கர் லூர்க் மற்றும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான சிறப்பு விசாரணை ஆணையாளர் அல்பான் அலென்கஸ்ரோ ஆகியோருக்கு நாடு கடந்த தமிழீழ அரசு அழைப்பு விடுத்துள்ளது.

அகழ்வுப்பணி தொடர்ந்தும் நடைபெறுகையில் அதன் நடைமுறையையும் சர்வதேசக் குற்றங்களுக்கான ஆதாரத்தை நேர்மையாகப் பாதுகாக்கும் வகையில் அவசர கோரிக்கைகளாக நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் விசுவநாதன் உருத்திரகுமாரன் கடிதங்களை அனுப்பியுள்ளார்.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

அண்மையில் கண்டுபிடிக்கப்பட்ட பாரிய மனிதப்புதைகுழிக்கு விஜயம் செய்யுமாறும் அவ்விடத்தை கையகப்படுத்துமாறும் உலகளாவிய ரீதியிலுள்ள தமிழ் மக்கள், பாதிக்கப்பட்டவர்கள், மற்றும் அவர்களின் குடும்பங்கள் சார்பாக நாடுகடந்த தமிழீழ அரசாங்கமானது இக் கோரிக்கையை உடனடியாகக் கோருகிறது.

வலிந்து காணாமல் ஆக்கலை தமிழினவழிப்பின் ஒரு கருவியாக இலங்கை பயன்படுத்துகிறது.

தமிழர் தாயகத்தில் அண்மையில் கண்டுபிடிக்கப்பட்ட பாரிய மனிதப் புதைகுழி அமைந்திருப்பது ஆச்சரியப்படுவதற்கில்லை.

இதுவரையில் கண்டுபிடிக்கப்பட்ட 33ஆவதான இந்தப் பாரிய மனிதப்புதைகுழி கண்டுபிடிக்கப்பட்ட இடமானது யுத்தத்தின்போது இலங்கை இராணுவத்தின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்தது. இதேவேளை புதைகுழிக்கருகில் பாரிய இராணுவ முகாமொன்று காணப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

தங்களின் பிள்ளைகளின் நிலைகளை இதுவரையில் அறியாத வலிந்து காணமலாக்கப்பட்டோரின் ஆயிரக்கணக்கான தாய்மார்கள் உட்பட தமிழ் மக்கள், வலிந்து காணமலாக்கப்பட்டோர் மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் உறுப்பினர்களே கண்டுபிடிக்கப்படுவதாக அஞ்சுகின்றனர்.

இதுதான் உண்மையெனில், உங்களுடைய அலுவலகத்தின் தலையீடில்லாமல் உண்மை எப்போதும் வெளிவராதென மேலதிகமான அச்சம் காணப்படுகிறது.

உங்களது அலுவலகத்தின் தொழில் நிபுணத்துவமும் மனித உரிமைகளுக்கு மதிப்பளிப்பதுவும் இந்த விடயத்தில் உடனடியாகத் தேவை.

பாரிய மனிதப் புதைகுழிகளுக்கு பேர்போனதாக இலங்கை காணப்படுகின்றது. கடந்த 30 ஆண்டுகளில் 32 பாரிய மனிதப் புதைகுழிகள் (புதிய கண்டுபிடிப்பு 33ஆவதாகும்) இலங்கைத் தீவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

எந்தவொரு இலங்கை விசாரணை ஆணைக்குழுவும் பாரிய மனிதப் புதைகுழிகளை நோக்குகின்ற அதிகாரத்தைக் கொண்டிருக்கவில்லை. உண்மையைக் கண்டறியும் நடவடிக்கைகள் தடுக்கப்படுகிறது. திடீரென நீதிவான்கள், தடயவியல் நிபுணர்கள் இடமாற்றப்படுகின்றனர்.

சட்ட ஆணைகளை நிறைவேற்றுவதை பொலிஸ் தாமதப்படுத்துகிறது. சம்பவ இடங்களுக்கு குடும்பங்களின் வழக்கறிஞர்களுக்கு அனுமதி மறுக்கப்படுகிறது. உயிருடனுள்ள சாட்சிகளைக் கண்டுபிடிப்பதற்கு எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை.

இறப்பின் முன்னான எவ்வித தகவல்களும் சேகரிக்கப்படவில்லை. அரிதாக சிலர் குற்றவாளியாக்கப்பட்டால், அவர்கள் பின்னர் பொதுமன்னிப்பளிக்கப்படுகின்றனர்.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு இது தீர்க்கமுடியாத துயரமாக உள்ளது. வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் உண்மையை அறியாமலே இறக்கிறார்கள்.

பாரிய மனிதப் புதைகுழிகள் தொடர்பான பொலிஸ் விசாரணைகளை இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தடுத்ததாகவும் இந்த அறிக்கை குறிப்பிடுகிறது.

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் சபைக்கு ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழுவால் 2014 ஆம் ஆண்டு சமர்ப்பிக்கப்பட்ட "இலங்கை: பாரிய மனிதப் புதைகுழிகளின் புறக்கணிப்பு" அறிக்கையில் உங்களது கவனத்தை செலுத்த வைக்க விரும்புகின்றேன் என அவர் தெரிவித்துள்ளார். (நி-5)

# கோவில் பிரச்சினைகள் எனக் கூறி வெளிநாட்டில் உள்ளவர்களிடம் பண மோசடி

## நெல்லியடி பொலிஸ் பொறுப்பதிகாரி தெரிவிப்பு

(கரணவாய்)

கோவில் பிரச்சினை எனக் கூறி வெளிநாட்டில் உள்ளவர்களிடம் தேவையற்ற விதத்தில் பணம் பெறும் சம்பவம் இடம்பெறுவதாக நெல்லியடி பொலிஸ் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் நேற்று இடம்பெற்ற சிவில் பாதுகாப்பு கூட்டத்தின் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரச உத்தியோகத்தர் ஒருவர் தமது ஊரில் கோவில் பிரச்சினை ஒன்று உள்ளது. பொலிஸாருக்கு பணம் கொடுப்பதன் மூலம் அதனை தீர்க்க முடியும் எனக் கூறிபிரான்ஸ், ஜேர்மனில் உள்ள உறவுகளிடம் ஒரு லட்சம் ரூபா பெற்றுள்ளார்.

சிறிது நாட்களின் பின் வெளிநாட்டில் இருந்து பணம் அனுப்பியவர் இங்கு வருகை தந்து என்னை சந்தித்து கோவில் பிரச்சினைக்கு பணம் அனுப்பினேன் கிடைத்து விட்டதா என வினவினார்.

அதன்போது நாம் அவ்வாறு பணம் வாங்குவதில்லை எனவும் கோவில் பிரச்சினையை நீதிமன்றிற்கு செல்லாமல் தீர்த்து வைப்பேன் எனவும் தெரிவித்தேன். அதன் பின்னரே குறித்த விடயம் வெளிச்சத்திற்கு வந்தது.

எனவே இது தொடர்பில் அனைவரும் விழிப்பாக இருக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.(4-5-60)

# சாதாரண தர செய்முறைப் பரீட்சைகள் ஓகஸ்டில் ஆரம்பம்-பரீட்சைத் திணைக்களம்

(கொழும்பு)

இவ்வருடம் இடம்பெற்ற 2022ஆம்ஆண்டுக்கான கல்விப் பொது தராதர சாதாரண தர பரீட்சைக்கான நடைமுறைப் பரீட்சைகள் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 2 ஆம் திகதி ஆரம்பமாக வுள்ளதாக பரீட்சை திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதன்படி, இசை, நடனம், நாடகம் உள்ளிட்ட பாடங்களுக்கான நடைமுறைப் பரீட்சைகள் ஓகஸ்ட்மாதம்12 ஆம்திகதிவரை நடைபெறவுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர குறிப்பிட்டார்.

அத்தோடு, மேற்கத்திய இசை பாடம் தொடர்பான கேட்கும் பரீட்சை ஓகஸ்ட் மாதம் 6 ஆம் திகதி நடைபெறும் என பரீட்சை ஆணையாளர் நாயகம் குறிப்பிட்டுள்ளார்.

நடைமுறைப் பரீட்சைகளில் சிக்கல் இருப்பின், பரீட்சை திணைக்களத்தின் அவசர தொலைபேசி இலக்கமான 1911 அல்லது 0112784208, 011 2784537 அல்லது 011 2786616 ஆகிய தொலைபேசி இலக்கங்களுக்கு அழைக்கலாம் என பரீட்சை திணைக்களம் அறிவித்துள்ளது. (நி-5)

# இராசிபலன்

13.07.2023
ஆனி 28, வியாழக்கிழமை
ஏகாதசி முன்னிரவு 9.19 மணிவரை
கார்த்திகை பின்னிரவு 12.01 மணிவரை

சுபநேரம்-7.29-8.59 மணிவரை
இராகுகாலம்-1.29-2.59 மணிவரை
கார்த்திகை விரதம், ஏகாதசி விரதம்

சந்திராஷ்டமம்- அத்தம், சித்திரை

வளவன்



காலைப் பொழுதே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட முன்னேற்றம் காணும் நாள், கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள்.



ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் பணிபுரிவீர்கள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும் நாள்.



மறதியால் ஒரு சில வேலைகளை செய்யாமல் விட்டுவிடுவீர்கள், சில பிரச்சினைகளைக் கண்டும் காணாமலும் இருப்பது நல்லது, கவலைகள் தீர கந்தனை வழிபட வேண்டிய நாள்.



ஏட்டிக்குப் போட்டியாக செயற்பட்டவர்கள் மனம் மாறுவர், எதிர்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள்.



உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், பெருமைகள் வந்து சேர பெருமானை வழிபட வேண்டிய நாள்.



செய்தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், ஆரோக்கியமான நாள்.



வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், எண்ணங்கள் எளிதில் நிறைவேறும் நாள், வழிபாட்டில் நம்பிக்கை கூடும், வருமானம் திருப்தி தரும்.



நண்பர்கள் சந்திப்புக்கள் இடம்பெறலாம், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம்.



எடுத்த காரியங்களை நிறைவேற்ற அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள், வழிபாட்டால் பெருமை காண வேண்டிய நாள், சயன சுகக் குறைவான நாள்.



எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர், தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம்.



இனத்தார் பகை மாற எடுத்த முயற்சிகள் கைகூடும், புகழ் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், வியாபார விரோதம் விலகும், கடன்சுமை குறைய வழிவகை செய்வீர்கள்.



பகை விலகி பாசம் கூடும் நாள், பெரிய மனிதர்களின் சந்திப்பால் சிந்தை மகிழ்வீர்கள், தொழில் முயற்சியில் எதிர்பார்த்த நற்பலன் கிடைக்கும்.

உன்னுடைய மனப்பாங்குதான் உன் உயர்வை தீர்மானிக்கிறதேயொழிய தகுதி அல்ல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மண்டைதீவில் உள்ள

# மனிதப் புதைகுழிகள் தோண்டப்பட்டு உண்மைகள் வெளிப்பட வேண்டும்

## பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன்

(யாழ்ப்பாணம்)

**மண்டைதீவிலிருந்து படையினரை வெளியேற்றி அங்குள்ள மனிதப் புதைகுழிகள் தோண்டப்பட்டு உண்மைகள் வெளிக்கொண்டுவரப்பட வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் தெரிவித்தார்.**

மண்டைதீவில் காணி சுவீகரிப்பை தடுத்து நிறுத்தக் கோரி வேலுசுமண கடற்படை முகாமிற்கு முன்னால் எதிர்ப்புப் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

இந்நிலையில் குறித்த போராட்டத்தின் பின்னர் ஊடகங்களிடம் கருத்து தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எம்மைப் பொறுத்தவரை தமிழரது நிலங்களை சிங்களப் பேரினவாத நிகழ்ச்சி நிரலுக்கமைய ஆக்கிரமித்துள்ள கடற்படை முற்றாக வெளியேற்றப்பட வேண்டும். இந்த மக்களுடைய காணிகள் மீள ஒப்படைக்கப்பட வேண்டும்.

தீவகப் பகுதியை படையினர் ஆக்கிரமித்த போது குறிப்பாக கோட்டாபய பொறுப்பிலிருந்த காலப்பகுதியில் நூற்றுக்கணக்கான பெண்கள் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டும் மிகக் கொடூரமாக சித்திரவதை செய்யப்பட்டும் ஆங்காங்கே புதைக்கப்பட்டுள்ளனர் என்பது உயிருடன் வாழ்ந்து கொண்டிருந்தவர்களின்சாட்சி.

எனவே படையினர் இங்கிருந்து வெளியேறுகின்ற போதே புதைகுழிகளைத் தோண்டி உடலங்களை எடுத்து காணாமல் போனவர்களுக்கு என்ன நடந்தது என்பதை விசாரணை மூலம் கண்டறிய முடியும்.

இங்கு அனைத்துக் காணிகளும் விடுவிக்கப்பட்டு மீள் குடியேற்றம் இடம்பெற்று விட்டது என்று அரசாங்கம் உலகத்திற்குச் சொல்லிக்கொண்டு மறுபுறத்திலே காணி அபக்ரிப்பு நடவடிக்கைளை தொடர்ந்தும் மேற்கொள்கின்றது.

இலங்கை அரசாங்கத்திடமிருந்து நீதி கிடைக்குமென நம்பிக்கை துளியளவேனும் இல்லாமல் கடந்த 14 ஆண்டுகளாக மக்கள் வலியுறுத்தி வருகின்றனர். அதை நிரூபிக்கின்ற வகையிலே தேசிய பாதுகாப்பிற்குரிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் தலைவர் பச்சை இனவாதி சரத் வீரசேகரவின் கருத்தும் உள்நாட்டுக்குள் ஒருபொழுதும் நீதி கிடைக்காது என்பதை புலப்படுத்துகின்றது.

இன்று மக்கள் பிரதிநிதிகள் அரசாங்கத்தோடு பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் போது இங்கு வந்து போராட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்றால் அரசு தமிழர்களுடைய கருத்துக்களை கணக்கெடுக்கவில்லை என்பதே அர்த்தமாகும்.

தமிழர்களோடு பேசி சர்வதேசத்தை ஏமாற்றி உதவிகளைப் பெற்று தென்னிலங்கையைக் கட்டியெழுப்பும் நடவடிக்கையையே மேற்கொள்கின்றது எனத் தெரிவித்தார். (4-5)



சர்வதேச கூட்டுறவு தினத்தின் 101 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு கூட்டுறவு தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக நாடு முழுவதும் துவிச்சக்கரவண்டியில் வலம் வந்த கூட்டுறவாளர் வை.கயிலைநாதனை தென்மராட்சி பல்நோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் தனங்கிளப்பு பகுதியில் வைத்து கௌரவித்தனர்.

(படம்:சுபேசன்)

# பனைசார் உற்பத்தி தொடர்பான கண்காட்சியும் விற்பனையும்

(யாழ்ப்பாணம்)

ஆடிப்பிறப்பை முன்னிட்டு வடக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் மற்றும் பனை,தென்னை வள அபிவிருத்தி சங்கங்கள் இணைந்து நடத்தும் "தால முற்றம்" பனை சார் உற்பத்தி கண்காட்சியும் விற்பனையும் இடம்பெறவுள்ளன.

அது நல்லூர் சங்கிலியன் பூங்காவில் 14 ,15,16 ஆகிய தினங்களில் காலை 9 மணி தொடக்கம் இரவு 7 மணி வரை நடைபெறவுள்ளது. கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் மற்றும் கூட்டுறவு சங்கங்களின் பதிவாளருமான திருமதி. தேவநந்தினி பாபு தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

அத்துடன், சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண பிரதம செயலாளர் எஸ்.எம்.சமன் பந்துலசேன மற்றும் வடக்கு மாகாண மகளிர் விவகாரம் மற்றும் கூட்டுறவு அமைச்சு செயலாளர் திருமதி ரூபினி வரதலிங்கம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (4-5)


## INVITATION FOR BIDS (IFB)

### KARACHCHI PRADESHIYA SABHA, KILINOCHCHI DISTRICT

01. The Chairman, Local Authority ,Procurement Committee (LAPC) on behalf of the Karachchi Pradeshiya Sabha now invites sealed bids from eligible and qualified bidders for **Construction of Sivasuntharam Road Pravipanchan Karachchi Pradeshiya Sabha** Kilinochchi Region **as** described below.

| No | Contract No | Contract Name | Tentative Estimated Cost (Without Vat) (Rs. Mn) | Required Minimum CIDA Grade | Contract Period |
|---|---|---|---|---|---|
| 01 | NP/KN/KPS/2023/PSDG-1 | Construction of Sivasuntharam Road Pravipanchan Karachchi Pradeshiya Sabha Kilinochchi Region | 8.695 | C8,C7 & C6 (Highway) | 98 Days |

02. Bidding will be conducted through **National Competitive Bidding (NCB)** procedure. And Public Finance Circulars No 03/2020 (i) and 04/2016 dated 11.01.2021 and 18.02.2021 respectively will be adopted.

03. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered in the specialty of **Highway Construction** for grade mentioned in the table above with the Construction Industry Development Authority (CIDA).

04. Qualification requirements are indicated in Section 5 (Bidding Data , Schedule and Contract Data) of the Bidding document.

05. Interested bidders may obtain further information from **Secretary, Karachchi Pradeshiya Sabha, A9 Road, Kilinochchi,** (T.P No: 021 228 5761, Fax No: 021285690) and inspect the bidding documents at the address given below from **13th July 2023** until **27th July2023** during **09:00**Hrs to **14:00** Hrs on normal working days.

06. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Secretary, Karachchi Pradeshiya Sabha, A9 Road, Kilinochchi** from **13th July 2023** until from **27th July 2023** during **09:00**Hrs to **14:00**Hrs on normal working days upon payment of a non-refundable fee of **Two Thousand Rupees(Rs.2,000.00)**. The method of payment will be by cash.

07. Bids shall be delivered in duplicate to the address below at **Chairman , Procurement Committee, Karachchi Pradeshiya Sabha, A9 Road, Kilinochchi** on or before **14.00**Hrs **on 27th July 2023** Late bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the bidders' representatives who choose to attend.

08. Bids shall be valid up to (77 days) **12th October , 2023.** All bids shall be accompanied by a Bid-Security, of **Rs.87,000.00** Bid Security shall be valid up to **09th November , 2023.**

09. A pre-bid meeting will be held at 11.00 Hrs on **20th July 2023** at **Karachchi Pradeshiya Sabha,A9 Road, Kilinochchi.**

**Chairman,**
**Procurement Committee,**
**Karachchi Pradeshiya Sabha,**
**A9 Road,**
**Kilinochchi.**

(C-8905) **13.07.2023**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விஸ்தரிக்கப்பட வேண்டிய நிலையில் 263 பாலங்கள்-வீதி அபிவிருத்தி அதிகார சபை

(கொழும்பு)

நாட்டிலுள்ள பிரதான வீதிகளில் விஸ்தரிக்கப்பட வேண்டிய 263 பாலங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக வீதி அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

குறித்த பாலங்களை விரிவுபடுத்துவதற்காக 15.3 பில்லியன் ரூபா செலவாகுமென மதிப்பிடப்பட்டுள்ளதாக சபையின் பணிப்பாளர் நாயகம் சர்தா வீரகோன் குறிப்பிட்டுள்ளார்.

இதுதவிர சேதமடைந்த நிலையில் காணப்படும் 135 பாலங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் அவற்றை புனரமைக்க 12.3 மில்லியன் ரூபா தேவைப்படுமெனவும் அவர் தெரிவித்தார். (நி-5)

## தூத்துக்குடியில் இருந்து பட்டப்பகலில் இலங்கைக்கு போதைப்பொருள் கடத்தல்

(சென்னை)

தமிழ்நாட்டின் தூத்துக்குடி கடற்ரையில் இருந்து படகு மூலம் இலங்கைக்கு போதைப் பொருட்கள் கடத்தல் முயற்சி பட்டப்பகலில் இடம்பெற்றுள்ளமை அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

தூத்துக்குடி - தருவைக் குளம் கடற்கரை பகுதியில் இருந்து படகு ஒன்றில் பெருமளவான பொருட்கள் பொதி செய்யப்பட்ட நிலையில் ஏற்றப்பட்டு புறப்படும் காணொளிக் காட்சி வெளியாகியுள்ளது.

இலங்கை கடற்பரப்பிற்குள் அத்துமீறி நுழையும் தமிழ் நாட்டு இழுவைப் படகுகள் மூலம் இலங்கைக்கு கேரள கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருட்கள் சட்டவிரோதமான முறையில் கடத்தி வரப்படுவதாக கூறப்படும் நிலையில் இக்காணொளி காட்சியில் தமிழ் நாட்டு இழுவைப் படகுகளின் பின்னணியில் போதைப்பொருட்கள் ஏற்றிய படகு புறப்படும் காட்சி பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

## மேலும் 300 பொருட்கள் மீதான இறக்குமதிக்கட்டுப்பாடுகளில் தளர்வு



(கொழும்பு)

மேலும் 300 அத்தியாவசிய பொருட்களுக்கு விதிக்கப்பட்டுள்ள இறக்குமதி கட்டுப்பாடுகளை தளர்த்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித்சியம்பலாபிட்டிய அறிவித்துள்ளார்.

அடுத்த வாரத்திற்குள் இறக்குமதி கட்டுப்பாடுகள் தளர்த்தப்படும் என எதிர்பார்க்கப்படுவதாக இராஜாங்க அமைச்சர் நேற்று தனது டுவிட்டரில் தெரிவித்துள்ளார்.

கடந்த மாதம் 240 இற்கும் மேற்பட்ட பொருட்களின் இறக்குமதி தடையை நீக்கி அரசாங்கம் வர்த்தமானி அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

கொரோனா வைரஸ் தொற்றுநோய் காரணமாக 2020 மார்ச் மாதம் முதல் கடுமையான இறக்குமதி கட்டுப்பாடுகளின் ஒரு பகுதியாக அரசாங்கம் பல பொருட்களுக்கு தடை விதித்தது.

பொருளாதார நெருக்கடி காரணமாக இறக்குமதி மீதான தடை கடந்த ஆண்டு நவம்பர் வரை நீடித்தது.

அதன் பின் அரசாங்கம் பல பொருட்களின் மீதான இறக்குமதி கட்டுப்பாடுகளை தளர்த்த நடவடிக்கை எடுத் தது என அவர் தெரிவித்தார். (நி-5)


## தொழுநோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

(கொழும்பு)

தொழுநோயாளிகள் மற்றும் காசநோயாளிகளை அடையாளம் காணாவிட்டால், அது வேறு ஒருவருக்கு பரவும் அபாயம் உள்ளதாகவும் சுகாதாரத் துறையினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

தொழுநோயை 18 மாதங்களில் குணப்படுத்த முடியும் என்றாலும் பாதுகாக்கப்படாவிட்டால் சிக்கல்கள் ஏற்படும் அபாயம் இருப்பதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

நாட்டிலேயே அதிக தொழுநோயாளிகள் கொழும்பு மாவட்டத்தில் பதிவாகியுள்ளதாக கொழும்பு மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த வருடத்தின் ஆரம்பம் முதல் தற்போது வரை கொழும்பு மாவட்டத்தில் 100 தொழுநோயாளிகள் பதிவாகியுள்ளதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டினர். (நி-5)



ஆங்கில மொழிமூல கற்கையை ஊக்குவிக்கும் நோக்குடன் அண்மையில் மகாஜனக் கல்லூரியின் தரம் 7,8 ஆங்கிலமொழி மூலம் கற்கும் மாணவர்களுக்கு ஆசிரியர்களான வி.குகநாதன், வ.பாலமுரளி ஆகியோரால் எழுதப்பட்ட ஆங்கிலமொழி மூல கணித பயிற்சி நூல்கள் அன்பளிப்பு செய்யப்பட்டன.

## அனுமதிப்பத்திரம் இன்றி சேவையில் ஈடுபடும் பேருந்துகளை தேடி விசேட சுற்றிவளைப்பு

(கொழும்பு)

அனுமதிப்பத்திரம் இன்றி பயணிகள்ள ஏற்றிச்செல்லும் பேருந்துகளை கண்டறிவதற்காக விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதற்காக 4 குழுக்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் நிலான் மிரண்டா தெரிவித்தார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை பொலநறுவை - மன்னம்பிட்டி பாலத்தில் இருந்து பேருந்தொன்று ஆற்றுக்குள் வீழ்ந்து விபத்திற்குள்ளானதையடுத்து இந்த நடவடிக்கை மீள ஆரம்பிக்கப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

இந்த விபத்தில் 10 பேர் உயிரிழந்ததுடன் 40 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். (நி-5)

## பீடியின் விலை அதிகரிப்பு?

(கொழும்பு)

பீடி ஒன்றின் விலையை, 4 ரூபாவினால் அதிகரிக்குமாறு, பீடி உற்பத்தி தொழில்துறையினர் கோரியுள்ளதாக மதுவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில், மதுவரித் திணைக்கள ஊடகப் பேச்சாளரும் மேலதிக மதுவரி ஆணையாளருமான கபில குமாரசிங்க இதனைத் தெரிவித்துள்ளார்.

பீடியின் விலையை அதிகரிக்க, அந்தத் தொழிற்துறையினருக்கு சட்ட ரீதியான தடை எதுவும் இல்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேநேரம், இன்று முதல் ஒரு மாத காலத்திற்கு, மதுவரித் திணைக்கள அதிகாரிகளை, வழமையான சேவையில் இருந்து விலக்கி, புகையிலை கைத்தொழிலை ஒழுங்குமுறைப்படுத்தும் பணிகளில் ஈடுபடுத்த மதுவரித் திணைக்கள ஆணையாளர் தீர்மானித்துள்ளார். (நி-5)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: பூராடம் 4 இல் சூரி, செவ்<br>கி.பா: 36<br>உயரம்: 172 Cm<br>தகைமை/தொழில்:முகாமைத்துவ பட்டதாரி (DO) (அரச)<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி உத்தியோகமுள்ள பெண்.<br>தொ.இ: B/13800 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி<br>உயரம்:5' 3"<br>தகைமை/தொழில்: BSc (Bio medical Science) Consultant(London)<br>எதிர்பார்ப்பு: Doctor,Engineer/ வெளிநாடு<br>தொ.இ:G/13798 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>கி.பா: 37<br>உயரம்: 5' 10"<br>தகைமை/தொழில் CIMA,Accountant (தனியார்)<br>எதிர்பார்ப்பு: படித்த பெண்.<br>தொ.இ: B/13812 | பிறப்பு:2000 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>உயரம்:5'8<br>தகைமை/தொழில்Computer Science மாணவி<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு<br>தொ.இ: G/13834 |
| பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>உயரம்:5' 6"<br>தகைமை/தொழில்: NDT ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு: அரச/ தனியார் தொழில்<br>தொ.இ: B/13815 | பிறப்பு: 1997 இந்து<br>நட்சத்திரம்: உத்திரட்டாதி<br>கி.பா: 24<br>உயரம்:165 Cm<br>தகைமை/தொழில்: BSc,IT Software Engineer<br>எதிர்பார்ப்பு:உயர்பதவி<br>தொ.இ:G/13836 |
| பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா: 35 1/4<br>உயரம்:175 Cm<br>தகைமை/தொழில்: BSc , MSc காசாளர் லண்டன்<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி /வெளிநாடு<br>தொ.இ: B/13819 | பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா: 42 3/4<br>உயரம்:5' 4"<br>தகைமை/தொழில்: HND, சுவிஸ்<br>எதிர்பார்ப்பு: சுவிஸ், ஜேர்மனி வரன்<br>தொ.இ:G/13833 |


கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## முகநூல் தரிசனம் 164

## முகம் பார்க்காத நோயாளி நண்பர்களின் நட்பு



ஒரு பெரிய மருத்துவமனை. அவற்றில் ஒரு அறையில் இரு தீவிர நோயாளிகள். ஒருவரை இன்னொருவர் பார்த்தது இல்லை.

இருவருக்குமிடையே ஒரு தடுப்புச் சுவர். ஒருவரின் படுக்கை யன்னல் அருகில். இன்னொருவருக்கு யன்னல் கிடையாது. எப்போதாவது வந்து செல்லும் மருத் துவச் செவிலியைத் தவிர தனிமை.. தனிமை.. தனிமை..

யன்னல் படுக்கை நோயாளிக்கு புற்றுநோய். இன்னொருவர் கடும் எலும்புமுறிவு நோயாளி. நாளடைவில் இருவரும் நட்பாகி விட்டனர். ஒருமுறை.எலும்புமுறிவு நோயாளி யன்னல் ஓர நோயாளியிடம் சொன்னார். உனக்காவது பொழுதுபோக்காக, ஒரு யன்னல் இருக்கிறது. எனக்கு அதுகூட இல்லை"

கவலைப்படாதே நண்பா. நான் யன்னலூடே என்னென்ன காண்கிறேனோ அவ்வளவையும் உன்னிடம் விபரிக்கிறேன். இதை ஒரு ஒப்பந்தமாகவே கடைப் பிடிப்பேன். அன்று முதல் யன்னல் நோயாளி, தான் கண்டகாட்சிகளை சுவைபட தன் நண்பனுக்குக் கூற லானார்.

நண்பா! யன்னலுக்கு வெளியே ஒரு பெரிய ஏரி.நடுவில் சிறு தீவு. ஏரியில் படகுகள் மிதக்கின்றன. ஏரிக்கரையில் அழகான பூங்கா. சிறுவர்கள் விளையாடிக் கொண்டிருக் கிறார்கள்.எலும்பு நோயாளிக்கு அப்படியே காட்சிகள் மனக்கண்ணில் விரியும்..

யன்னல் நோயாளி இன்னொரு நாள் சொல்வார். ஏரிக்கரை ஓரமாக ஒரு சாலை. அதில் மணப்பெண் அழைப்பு ஊர்வலம் போய்க் கொண்டிருக்கிறது. குழந்தைகள் மகிழ்ச்சியுடன் ஓடித் திரிகின்றனர். மணப்பெண்ணிடம் தோழி ஏதோ சொல்கிறாள்.

மணப்பெண் முகத்தில் அப்படி ஒரு வெட்கம். "ஊர்வல ஆரவாரங்கள் எதுவும் எலும்புநோயாளிக்கு கேட்க வில்லையாயினும் நாதஸ்வரமும் தவிலும் ஒலிக்க ஊர்வலம் போகும் காட்சியை நன்கு அனுபவிப்பார். ஒருநாள் யன்னல் நோயாளி செத்துப் போனார். மீண்டும் எலும்பு நோயாளிக்கு வெறுமை.தனிமை.

ஒருநாள் செவிலி வந்த போது, தன் படுக்கையை யன்னல் ஓரமாக மாற்றித் தரும்படி கேட்டுக்கொள்ள, அவ்வாறே செய்யப்பட்டது.இனி எனக்கு நன்கு பொழுது போகும் என்று எண்ணியவாறே தன் எலும்புமுறிவு வலியையும் பொருட்படுத்தாமல் மெல்ல தன் உடலை உயர்த்தி யன்னல் வழியே நோக்க அங்கே பெரிய சுவர்.

வேறு எதுவுமே இல்லை. அப்படியானால் யன்னல் நோயாளி சொன்ன கதைகள்.

மறுநாள் செவிலி வந்தவுடன் நடந்தவற்றை எலும்பு நோயாளி கூறினார். செவிலி,எலும்பு நோயாளிக்கு ஊசி மூலம் மருந்தை ஏற்றியபடியே சொன்னாள்.

நீங்கள் பார்க்கும் சுவர் கூட அவருக்கு தெரிந்திருக்காது. புற்றுநோயின்தாக்கத்தால் அவர் பார்வையை எப்போதோ இழந்து விட்டிருந்தார் என்று.

அன்பு நண்பர்களே! தன் துன்பங்களை மறைத்துக் கொண்டு தன் நண்பனை சந்தோசமாக வைத்திருப்பவனே நல்ல நண்பன். நட்புடன் உங்கள் நண்பன்.

அன்பு வாசகர்களே!
முகநூலில் உங்கள் மனதைத் தொடும் பதிவுகளை வலம்புரியின் "முகநூல் தரிசனம்" பகுதிக்கு உங்கள் பெயரைக் குறிப்பிட்டு Valampurii Seithy எனும் வலம்புரி முகப் புத்தகத்திற்கு Share செய்யுங்கள் அல்லது 076 636 3378 எனும் viber இலக்கத்திற்கு அல்லது valampurii@yahoo.com எனும் E-Mail இற்கு அனுப்பி வையுங்கள்.

## 'வந்தே பாரத்' புகையிரதத்தின் மீது கற்களை வீசித் தாக்குதல்



(டில்லி)

ஆடுகளைப் பலியெடுத்த 'வந்தே பாரத்' புகையிரதத்தின் மீது சிலர் கற்களை வீசித் தாக்குதல் நடத்திய சம்பவம் உத்தர பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

நேற்று கோரக்பூரில் இருந்து லக்னோ நோக்கிப் பயணித்த வந்தே பாரத் புகையிரதத்தின் மீது சொஹாவால் பகுதியில் வைத்து சிலர் கற்களை வீசித் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இதில் புகையிரதத்தின் ஜன்னல் கண்ணாடிகள் சேதமடைந்தன. எனினும் பயணிகள் யாருக்கும் எந்த பாதிப்பும் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத் தாக்குதல் தொடர்பாக பொலிஸார் தந்தை மற்றும் இரு மகன்களை கைது செய்தனர்.

அவர்களிடம் பொலிஸார் நடத்திய விசாரணையில், அவர்களுக்கு சொந்தமான 6 ஆடுகள் மீது கடந்த 9 ஆம் திகதி வந்தே பாரத் மோதியுள்ளதாகவும் இதில் அவை அனைத்தும் இறந்துள்ளதாகவும் இதனால் ஆத்திரமடைந்தே குறித்த புகையிரதத்தின் மீது தாக்குதல் நடத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கோராக்பூர்-லக்னோ இடையிலான வழித் தடத்தில் இயக்கப்படும் வந்தே பாரத்தை கடந்த 7ஆம் திகதி பிரதமர் மோடி தொடங்கி வைத்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (நி-5)

## பிரேசில் மதுக்கூடத்தில் துப்பாக்கிச் சூடு நால்வர் உயிரிழப்பு - இருவர் காயம்

(பிரசிலியா)

பிரேசிலின் சாவ் பாவ்லோ நகரில் உள்ள மதுக்கூடத்தில் நேர்ந்த துப்பாக்கிச் சூட்டுத் தாக்குதலில் சுமார் 4 பேர் கொல்லப்பட்டனர்.

அதில் இருவர் இளம் வயதினர்.

நேற்று பிரேசில் நேரப்படி, நள்ளிரவுக்குச் சில நிமிடங்கள் முன்பு தாக்குதல் நேர்ந்ததாக அந் நாட்டுப் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தில் இருவருக்கு காயங்கள் ஏற்பட்டுள்ளன. 2 சந்தேகநபர்கள் மோட்டர் சைக்கிளில் வந்து சுமார் 20 முறை மதுக் கூடத்தினுள் துப்பாக்கியால் சுட்டதாகத் தெரிவிக்கப் பட்டது.

சாவ் பாவ்லோ குண்டர் கும்பல்களுக்கு இடையே நிலவும் விரிசல் காரணமாகத் தாக்குதல் நடந்திருக்கலாம் என்று உள்ளூர் ஊடகங்கள் தெரிவித்தன. (நி-5)

### அவுஸ்திரேலியாவில்

## பல மில்லியன் மரங்களை உலுக்கும் மர்மநோய்





(கன்பரா)

அவுஸ்திரேலியாவின் பல மில்லியன் மரங்களை உலுக்கிக் கொண்டிருக்கிறது ஒரு மர்ம நோய்.அதற்குத் தீர்வு காணும் முயற்சியில் இறங்கி வெற்றி கண்டுள்ளனர் பெர்த் ஆய்வாளர்கள். மரங்கள் நம் வாழ்வின் வரங்கள்.

அப்படிப்பட்ட மரங்களை குளோரோசிஸ் எனப்படும் ஒரு வகை நோய் பாதித்துள்ளது.

இந்த நோய் ஏற்படும் போது மரங்களில் இலைகளின் நிறம் மஞ்சளாக மாறி இலைகள் மரங்களிலிருந்து உதிர்ந்து விடுகின்றன.இந்த நோய் முதன் முதலில் 2003 இல் தோன்றியது.

நீண்ட ஆராய்ச்சிக்குப் பிறகு மரங்களுக்குப் பாய்ச்சப்படும் தண்ணீர்த் தரத்தின் மாற்றமே அந்த நோய்க்குக் காரணம் என ஆய்வாளர்கள் உறுதி செய்துள்ளனர்.

1990 கள்முதல் தண்ணீரால் இரும்புக்கறை படிவதைத் தடுக்க ஆழ்துளை நீர் சுத்திகரிக்கப்பட்டு வருகிறது.

அதனால் மண்ணின் அமிலத்தன்மை மரங்களுக்கு ஏற்றதாக இல்லை.

தேவையான ஊட்டச் சத்தையும் மரங்கள் பெற முடியாமல் போனது.

மரங்களுக்கு நிகழ்ந்த பாதிப்புக்கான காரணத்தைக் கண்டுபிடிப்பது பெரும் சவாலாய் இருந்ததாக ஆய்வாளர்கள் தெரிவித்தனர்.

இதற்குத் தீர்வாக மண்ணின் அமிலத்தன்மையைச் சரிசெய்ய முயற்சி மேற்கொள்ளப்படுகிறது. (நி-5)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

## தனது வான்பரப்பிற்குள் நுழையும் அமெரிக்க விமானங்களை சுட்டு விழுத்தப் போவதாக எச்சரித்த சில தினங்களில்

# கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணையை ஏவியது வடகொரியா



(பியாங்யாங்)

தனது வான் பரப்புக்குள் நுழையும் அமெரிக்க உளவு விமானங்களை சுட்டு வீழ்த்தப் போவதாக வடகொரியா எச்சரித்து சில தினங்களின் பின்னர் கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணைப் பரிசோதனையை வடகொரியா நடத்தியுள்ளது.

இந்த ஏவுகணை பரிசோதனையானது கொரிய தீபகத்தின் அமைதிக்கும் பாதுகாப்புக்கும் பாதிப்பை ஏற்படுத்துவதாக உள்ளதுடன், ஐ.நாவின் தடைகளையும் மீறுகிறது என தென்கொரியா தெரிவித்துள்ளது.

கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணையொன்றை வட கொரியா நேற்று ஏவியதாக தென்கொரிய இராணுவம் தெரிவித்துள்ளது.

உள்ளூர் நேரப்படி நேற்று முற்பகல் 10 மணிக்கு இந்த ஏவுகணை ஏவப்பட்டதாகவும் சுமார் 1000 கிலோ மீற்றர் தூரம் பறந்த இந்த ஏவுணை கிழக்குக் கடல் (ஜப்பானியக் கடல்) பகுதியில் வீழ்ந்ததாகவும் தென்கொரிய இராணுவம் தெரிவித்துள்ளது.

இதற்கு முன் இறுதியாக கடந்த ஏப்ரல் மாதம் சக்தி வாய்ந்த ஏவுகணைகளை வடகொரியா பரீட்சித்திருந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது. (நி-5)

## கடும் பொருளாதார நெருக்கடி காரணமாக போர் விமானங்களை விற்கும் பாகிஸ்தான்

(இஸ்லாமாபாத்)

கடுமையான பொருளாதார நெருக்கடியில் சிக்கி தவிக்கும் பாகிஸ்தான், தான் வாங்கிய போர் விமானங்களை விற்பனை செய்ய உள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

பாகிஸ்தானில் கடந்த சில ஆண்டுகளாக கடும் நிதி நெருக்கடி ஏற்பட்டுள்ளது. சீனா ஓரளவுக்கு நிதி கொடுத்து உதவி செய்த போதிலும் அந்நாட்டின் நிதி மீண்டு வரவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் கடும் நிதி நெருக்கடி காரணமாக இராணுவத்திற்கு சொந்தமான போர் விமானங்களை பாகிஸ்தான் சில ஆண்டுகளுக்கு முன் வாங்கிய நிலையில் தற்போது அந்த போர் விமானங்களை ஈராக் நாட்டிற்கு விற்க முடிவு செய்துள்ளது.



1.1 பில்லியன் டொலர் மதிப்புள்ள இந்த ஒப்பந்தத்தில் பாகிஸ்தான் கையெழுத்திட்டு உள்ளதாகவும் இதுவரை பாகிஸ்தான் வரலாற்றில் போர் விமானங்களை விற்பனை செய்ததில்லை.

ஆனால் போர் விமானங்களை விற்பதால் கிடைக்கும் பணத்தில் கூட பாகிஸ்தானின் பொருளாதாரம் மீளாது என்று அந்நாட்டு பொருளாதார அறிஞர்கள் கூறி வருகின்றனர். (நி-5)

## பல்பொருள் அங்காடியில் துப்பாக்கிச் சூடு 9 பேர் உயிரிழப்பு - ஒருவர் படுகாயம்



(மெக்சிக்கோ)

பிர்பல பல்பொருள் அங்காடி மீது மர்ம நபர்கள் சிலர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில், 9 பேர் உயிரிழந்த சம்பவம் மெக்சிக்கோவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

மெக்சிக்கோவின் டொலுகா நகரில் உள்ள பல்பொருள் அங்காடியொன்றிலேயே கடந்த திங்கட்கிழமை இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவ தினத் தன்று விற்பனை நிலையத்திற்குள் புகுந்த மர்ம நபர்கள் அங்கிருந்தவர்கள் மீது கண்மூடித்தனமாகத் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டு விட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

இத்தாக்குதலில் 9 பேர் உயிரிழந்துள்ளனர் எனவும் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் முன்விரோதம் காரணமாகவே இத்தாக்குதல் நடத்தப்பட்டிருப்பதாக பொலிஸாரின் விசாரணையில் இருந்து தெரியவந்துள்ளது. (நி-5)

## தாய்லாந்தை உலுக்கிய

# பிரபல செல்வந்தரின் கொடூரக் கொலை அதிர்ச்சியில் உலக நாடுகள்

(பாங்காக்)

தாய்லாந்தில் ஜேர்மனியைச் சேர்ந்த பிரபல செல்வந்தர் ஒருவர் கொடூரமாகக் கொலை செய்யப்பட்டு, அவரது சடலம் துண்டு துண்டுகளாக வெட்டப்பட்டு குளிரூட்டியில் வைக்கப்பட்டிருந்த சம்பவம் உலக நாடுகளை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.

ஹான்ஸ்-பீட்டர் ராஸ்டர் மேக் என்ற 62 வயதான நபரே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார். தாய்லாந்தின் பட்டயா நகரில் தனது 24 வயதான மனைவியுடன் வசித்து வந்த மேக், கடந்த 4 ஆம் திகதி வியாபார விடயமாக வெளியே சென்றுள்ள நிலையில் நீண்ட நாட்களாகியும் வீடு திரும்பவில்லை என அவரது மனைவி பொலிஸ் நிலையத்தில் புகார் அளித்துள்ளார்.



இதனையடுத்து பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில் அவரது வங்கிக் கணக்கில் இருந்து சந்தேகத்திற்கிடமான வகையில் அதிகபடியான பணம் எடுக்கப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

இந்நிலையில் மேக் பயன்படுத்திய கறுப்பு நிற பென்ஸ் காரானது நாங் ப்ரூ நகரில் உள்ள அவரது வாடகை வீட்டுக்கு அருகே நிறுத்தி வைக்கப்பட்ட நிலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை பொலிஸாரினால் கண்டுபிடிக்கப்பட்டது.

இதனையடுத்துப் பொலிஸார் குறித்த வீட்டுக்குள் சென்று சோதனை மேற்கொண்ட போது அங்கிருந்த குளிர்சாதனப் பெட்டியொன்றில் இருந்து துண்டு துண்டுகளாக வெட்டப்பட்டு பொலித்தீன் பைகளில் அடைக்கப்பட்டிருந்த மேக் கின் சடலத்தைக் கண்டு பொலிஸார் அதிர்ச்சியடைந்துள்ளனர்.

இதனையடுத்து அவரது சடலத்தைக் கைப்பற்றிய பொலிஸார், கொலையாளியார் என்பது குறித்து தீவிர விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மை நோய்த் தாக்கம் நாட்டில் அதிகரிப்பு

## சிறுவர்களுக்கு தடுப்பூசியை தவறாது செலுத்துமாறு பெற்றோர்களுக்கு அறிவுறுத்து

(கொழும்பு)

நாட்டில் கடந்த சில நாட்களாக அம்மை நோய் அதிகரித்து காணப்படுவதாக மருத்துவர் தீபால் பெரேரா தெரிவித்தார்.

பிள்ளைகளுக்கு கடுமையான உடல்நலப் பிரச்சினைகளை ஏற்படுத்தும் என்பதால் பெற்றோர்கள் எச்சரிக்கையாக இருக்குமாறு அவர் வலியுறுதியுள்ளார்.

எம்எம்ஆர் தடுப்பூசி 9 மாதங்கள் மற்றும் மூன்று வயது சிறுவர்களுக்கு இலவசமாக வழங்கப்படுகிறது.

சிறுவர்களின் ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக இந்த தடுப்பூசிகளை பெற்றுக் கொள்ளுமாறு நாங்கள் பெற்றோர்களை அறிவுறுத்துகிறோம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

கொழும்பு சீமாட்டி சிறுவர் மருத்துவமனையில் சின்னம்மை நோய் தொற்றுக்குள்ளான நான்கு சிறுவர்கள் இனங்காணப்பட்டுள்ளதாகவும் மருத்துவர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார். அதிக காய்ச்சல், இருமல், மூக்கில் நீர் வடிதல், கண்களில் நீர் வடிதல் மற்றும் சிவப்பு புள்ளிகள் இந்த நோயின் அறிகுறிகள் ஆகும்..

அம்மை நோய்க்கான எம்.எம்.ஆர் தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ளாத சிறுவர்களும் இந்நோயின் அறிகுறிகளுடன் இருப்பதாக மருத்துவர் மேலும் தெரிவித்தார். (நி-5)

# மயக்க மருந்துகள் பாவனையிலிருந்து நீக்கம் சுகாதார அமைச்சு அதிரடி நடவடிக்கை

(கொழும்பு)

சிக்கல்களை ஏற்படுத்திய இரு மயக்க மருந்துகள் பாவனையிலிருந்து நீக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. அவற்றுக்கு பதிலாக வேறு மயக்க மருந்தொன்றை இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர், மருத்துவர் சமன் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை கடந்த காலங்களில் குறித்த மயக்க மருந்தினைப் பயன்படுத்தி சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்ட சில பெண்கள் உயிரிழந்தமையும் குறிப்பிடத்தக்கது. (நி-5)

# தேங்காய் எண்ணெய் உற்பத்தியை அதிகரிக்க நடவடிக்கை

(கொழும்பு)

உள்நாட்டில் தேங்காய் எண்ணெய் உற்பத்தியை அதிகரிக்க வேண்டும் என கோப் குழுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை 2020 முதல் 2022 ஆம் ஆண்டுவரை, இலங்கையில் நுகர்வுக்காக ஒரு இலட்சத்து 87 ஆயிரத்து 623 மெற்றிக் தொன் தேங்காய் எண்ணெய் இறக்குமதி செய்யப்பட்டுள்ளது.

இதனால், நாட்டில் தேங்காய் எண்ணெய் பாவனையில், 22 சதவீதம் உள்ளூர் உற்பத்தியிலும் 78 சதவீதம் இறக்குமதி செய்யப்பட்ட எண்ணெய்யிலும் ஈடுபடுத்தப்படுவது பெரும் பிரச்சினையாக உள்ளது எனக் கலந்துரையாடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5)



# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 300 | 300 | 300 | 300 |
| உருளைக்கிழங்கு | 240 | 220 | 220 | 240 |
| பச்சைமிளகாய் | 800 | 600 | 750 | 700 |
| தக்காளி | 600 | 500 | 500 | 600 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 240 | 200 | 300 |
| கோவா | 300 | 260 | 250 | 300 |
| கரட் | 360 | 450 | 450 | 450 |
| பூசணி | 100 | 100 | 100 | 150 |
| புடோல் | 180 | 160 | 150 | 240 |
| வாழைக்காய் | 160 | 150 | 100 | 150 |
| சின்ன வெங்காயம் | 420 | 340 | 450 | 500 |
| பெரிய வெங்காயம் | 160 | 130 | 150 | 160 |
| பாகற்காய் | 500 | 500 | 400 | 600 |
| வெண்டக்காய் | 240 | 200 | 150 | 400 |
| கருணைக் கிழங்கு | 200 | 190 | 180 | 250 |
| பயற்றங்காய் | 400 | 300 | 250 | 250 |
| லீக்ஸ் | 360 | 260 | 250 | 250 |
| பீற்றூட் | 420 | 380 | 200 | 450 |
| கறிமிளகாய் | 350 | 400 | 400 | 400 |
| முருங்கைக்காய் | 500 | 400 | 400 | 500 |
| போஞ்சி | 550 | 450 | 450 | 600 |
| கத்தரிதம்புள்ள | 260 | 250 | 180 | 250 |
| கீரை - 1 பிடி | 80 | 60 | 60 | 120 |
| தேசிக்காய் | 250 | 200 | 200 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 100 | 60-80 |
| இராசவள்ளி | 350 | 260 | 250 | 300 |
| வெங்காயப்பூ | 300 | 400 | 350 | 450 |
| முள்ளங்கி | 160 | 140 | 120 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 80 | 50 |
| வல்லாரை | 50 | 35 | 40 | 60 |
| ஈரப்பலா | 160 | 150 | 100 | 160 |




### பிந்துஜா

பொன்னு ரொம்ப பொறுமைசாலின்னு சொல்லி ஏமாத்திட்டாங்க.
அப்படி என்ன செய்தா?



காலைல பொறுமையாய் 10 மணிக்கு எழும்பிறாயா.

### டினுசன்

நாம தக்காளி வாங்க தானா மார்க்கெட் போறோம்.



எனக்கென்னவோ தங்கம் வாங்க போற மாதிரி பீலிங்கு...

### தஸ்வின்

ஐயாசாமி :- ஸ்கொட்லாந்தில் இருந்த போது நான் நிறைய சிங்கங்களைச் சுட்டுத் தள்ளியிருக்கிறேன்.

நண்பர் :- ஸ்கொட்லாந்தில் சிங்கமே கிடையாது என்று நான் புத்தகத்தில் படித்திருக்கின்றேனே!

ஐயாசாமி :- எப்படி இருக்கும்? எல்லாத்தையும் நான் தான் சுட்டுத் தள்ளிட்டனே.

### சபினா

கணவன்:- என்ன சட்னி ஒரே இனிப்பா இருக்கு
மனைவி:- அதுவாங்க தக்காளியை விட அப்பிள் விலை கம்மியா இருந்துச்சு அதுதான் அப்பிள் சட்னி செஞ்சிட்டன்...



### ராஜன்


பியூட்டி பார்லர் வாசலில் ஒரு வாசகம்...



எங்கள் கடையிலிருந்து வெளியே வரும் அழகிய பெண்ணைப் பார்த்து கண்ணடிக்காதீர்கள்.
ஒருவேளை அது உங்கள் பாட்டியாகக் கூட இருக்கலாம்.

### தாரணி

கால்நடைக்கு லோன் தருவீங்களாமே.
ஆமாம்... அதுக்கென்ன?



நான் பழனிக்கு கால்நடையா போகலாம்னு இருக்கேன். எனக்கு லோன் தருவீங்களா?

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவற்றை www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'சர்வதேச நியமனங்களுக்கு முரணாக இடம்பெறும் முல்லைத்தீவு மனித புதைகுழி அகழ்வுப் பணி'

## உறவுகள் நேற்று போராட்டம்



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட மனித புதைகுழி அகழ்வு நடவடிக்கைகளில் சர்வதேச கண் காணிப்பாளர்கள் அல்லது சர்வதேச நிபுணத்துவம் பெற்றவர்களை கொண்டு சர்வதேச நியமங்களுக்கு அமைய இந்த அகழ்வு பணி மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் மாவட்ட செயலகம் முன்பாக நேற்றுக் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

குறிப்பாக வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட தங்களுடைய உறவுகளை தேடி வருகின்ற நிலைமையில் இறுதி யுத்தத்தில் சரணடைந்ததாக சந்தேகிக் கப்படுபவர்களுடையதாக இருக்கலாம் என சந்தேகிக்கப்படுகின்ற கொக்குத் தொடுவாயில் அடையாளம் காணப்பட்ட மனித புதைகுழி அகழ்வு பணிகள் சர்வதேச நியமங்களுக்கு முரணாக இடம்பெற்று வருகிறது எனவே சர்வ தேச நிபுணத்துவம் பெற்றவர்களை கொண்டு சர்வ. தேச தலையீட்டுடன் குறித்த அகழ்வு பணிகள் மேற் கொள்ளப்பட்டு குறித்த உடலங்கள் யாருடையது என்பது தொடர்பாக கண்டறியப்பட வேண்டும் எனவும் குறித்த செயற்பாடு சர்வதேச கண்காணிப்புக்கு மத்தியில் இடம்பெற வேண்டும் என்பதையும் வலியுறுத்தி குறித்த போராட்டத்தை முன் னெடுத்திருந்தனர்.

முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப் பட்டவர்களின் உறவினர்கள் சங்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இப் போராட்டத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள், முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் உள்ளிட்ட அரசியல் பிரமுகர்கள், சமூக செயற்பாட்டாளர்கள் என பலரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (4-5)

## கோட்டை ஸ்ரீ முனீஸ்வரர் ஆலய இரத பவனி நாளை

(யாழ்ப்பாணம்)

யாழ்.கோட்டை ஸ்ரீ முனீஸ்வரர் தேவஸ்தான சோபகிருது வருட மண வாளக் கோல அலங்கார உற்சவம் கடந்த 28 ஆம் திகதி ஆரம்பமானது.

இவ் உற்சவத்தில் நாளை 14 ஆம் திகதி காலை 9 மணிக்கு சங்காபிஷேகமும் மாலை 4.30 மணிக்கு வசந்த மண்டபப் பூஜையும் அதனைத் தொடர்ந்து இரத பவனியும் இடம் பெறவுள்ளன. (4)

## ஐ.நா அதிகாரிகள் கிளிநொச்சிக்கு விஜயம்



(கண்டாவளை)

ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி திட்டத்தின் உயரதிகாரிகள் கிளிநொச்சி மாவட்டச் செயலகத்திற்கு விஜயமொன்றை மேற் கொண்டிருந்தனர்.

கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி. றூபவதி கேதீஸ்வரனை சந்தித்து கிளிநொச்சி மாவட்டத்தின் தற்போதைய நிலைமைகள் தொடர்பான விடயங்களை ஆய்வு செய்தனர்.

இதன்போது பொருளாதார நெருக்கடி, மீன்பிடி, விவசாயம், காணி பிரச்சினை, கண்ணிவெடி அகற்றுதல், வீட்டுத்திட்டம் தொடர்பான பிரச்சினைகளை மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி. றூபவதி கேதீஸ்வரன் தெளிவுபடுத்தியிருந்தார்.

இக்கலந்துரையாடலில் மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.முரளிதரன், மாவட்ட செயலகத் திட்டமிடல் பணிப்பாளர், மாவட்ட விவசாய பணிப்பாளர், யு.என்.டி.பி அதிகாரிகள், மாவட்டச் செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர், உத்தியோகத்தர்கள் என பல்வேறு தரப்பினரும் கலந்து கொண்டிருந்தனர். (4-5-315)

### சிறுபோக செய்கைக்குரிய

## பங்குகளை வழங்கும் அதிகாரம் நீர்ப்பாசன திணைக்களத்திற்கு இல்லை

### நீர்ப்பாசன பொறியியலாளர் தெரிவிப்பு

(கண்டாவளை)

நீர்ப்பாசன திணைக் களத்தினால் சிறுபோக செய்கைகளுக்குரிய பங்குகளை வழங்கும் அதிகாரம் எதுவும் இல்லையென இரணைமடு நீர்ப்பாசன பொறியியலாளர் எஸ்.செந்தில்குமரன் தெரிவித்துள்ளார்

கிளிநொச்சி இரணைமடுக்குளத்தின் கீழ் உள்ள உப்பாறு, உடுப்பாற்றுக் கண்டல்,புலிங்கதேவன், முறிப்பு ஆகிய பகுதிகளில் நீர்ப்பாசன வாய்க்கால்கள் கட்டுமானங்கள் இல்லாத மானாவாரி பயிர்ச் செய்கைக் காணிகள் மற்றும் ஆற்றொதுக்கு காணிகள் அரச ஒதுக்கீட்டுக் காணிகள் என்பவற்றுக்கு எந்தவித கூட்டத் தீர்மானங்களுமின்றி சுமார் 323 ஏக்கர் வரையான 248 பங்குகள் வழங்கப்பட்டுள்ளன.

இதனைவிட 42 ஏக்கர் வரையான 25 பங்குகளும் வழங்கப்பட்டு வெளியிடங்களுக்கு கொண்டு செல்லப்பட்டுள் ளன. குறித்த சிறுபோக பங்குகளானது 2022 ஆம் ஆண்டு மாவட்ட விவசாய குழு கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு அமைய இரணைமடு நீர்ப்பாசன பணிப்பாளரால் அனுமதிகள் வழங்கப்பட்டு அதன் படியே குறித்த பங்குகள் வழங்கப்பட்டுள்ளதாக புலிங்கதேவன் முறிப்பு கமக்கார அமைப்பினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் இரணைமடு நீர்ப்பாசன பொறியியலாளர் தொடர்பு கொண்டு கேட்ட போது பயிர்ச் செய்கைக்குரிய நீர் விநியோகப் பரப்பு மற்றும் நீர் விநியோகம் தொடர்பிலேயே நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் தீர் மானங்கள் எடுக்கப்படுகின்றன.

ஆனால் விவசாயிகளுக்கு பங்கு வழங்குவதையோ அல்லது பயிர்ச்செய்கை காணிகளை பங்கிட்டு வழங்குவதிலும் சம்பந்தப்படுவதில்லை என்றும் சிறுபோக செய்கைளுக்குரிய பங்குகளை வழங்கும் அதிகாரம் எதுவும் இல்லையென இரணைமடு நீர்ப்பாசன பொறியியலாளர் எஸ்.செந்தில்குமரன் தெரிவித்துள்ளார். (4-5-315)

## சடலத்தைப் பொறுப்பேற்கவும்

(யாழ்ப்பாணம்)

உரிமை கோரப்படாத நிலையில் கடந்த 9 ஆம் திகதி நோயாளர் காவு வண்டி மூலம் யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு வரப்பட்ட வே.விஸ்வலிங்கம் (வயது-63) என்ற நோயாளி யாழ்.போதனா மருத்துவமனையில் நீரிழிவு நோய்க்கான சிகிச்சையளிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி 10 ஆம் திகதி மரணமடைந்துள்ளார்.

இவர் திருகோணமலை மாவட்ட பொது வைத்தியசாலையில், நீரிழிவுக்கான சிகிச்சை பெற்று வந்துள்ள நிலையில் கடந்த வருடம் இவரது இடது முழங்காலிற்கு கீழ்ப் பக்கமாக கால் துண்டிக் கப்பட்டுள்ளது. இவரது சடலம் இதுவரை யாராலும் உரிமை கோரப்படாத நிலையில் யாழ். போதனா மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது.

எனவே குறித்த சடலத்தினை அடையாளம் காட்டி உரியவர்கள் பெற்றுக்கொள்ளுமாறு யாழ்.போதனா வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் கேட்டுக் கொண்டுள்ளார். (4)

## வருடாந்த பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

நாரந்தனை சைவ மகா சபையின் வருடாந்த பொதுக் கூட்டம் எதிர்வரும் 16 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு தான் தோன்றி ஸ்ரீ மனோன் மணி அம்பாள் ஆலய மணி மண்டபத்தில் சபைத் தலைவர் வே.துரைராசா தலைமையில் நடைபெறவுள்ளது. (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






"அப்படியே தெரிவித்து விடுகிறேன், அம்மணி!" என்றான் வந்தியத்தேவன்.

"அழகாயிருக்கிறது! நான் கூறியதையும் 'அப்படியே தெரிவிக்கிறேன்' என்றீர். இவள் சொன்னதையும் 'அப்படியே தெரிவிக்கிறேன்' என்று ஒப்புக் கொள்கிறீரே? இரண்டில் ஏதாவது ஒன்று தானே உண்மையாக இருக்க முடியும்?"

"அதனால் என்ன, அம்மணி! வாதி கூறியதையும் பிரதிவாதி சொன்னதையும் அப்படி அப்படியே நான் சொல்லி விடுகிறேன். எது உண்மை, எது இல்லை என்பதை இளவரசரே நீதிபதியாக இருந்து தீர்மானித்துக் கொள்ளட்டும்!" என்று சொன்னான் வந்தியத்தேவன்.

"ஆனால் ஒருவர் சொன்னதை இன்னொருவர் சொன்னதாக மட்டும் மாற்றிச் சொல்லி விடவேண்டாம்! உமக்குப் புண்ணியம் உண்டு!" என்றாள் வானதி.

குந்தவை இந்தப் பேச்சை அத்துடன் நிறுத்த விரும்பி, "வைத்தியரே! அரண்மனைத் திருமந்திர அதிகாரியிடமிருந்து இவர்களுக்குக் கொடுத்து அனுப்ப ஓலை கிடைத்ததா?" என்று கேட்டாள்.

"கிடைத்தது தாயே! 'சக்கரவர்த்திக்கு வைத்தியம் செய்வதற்காக இவர்கள் மூலிகை கொண்டு வரப்போவதால் வழியிலுள்ள அரசாங்க அதிகாரிகள் எல்லாரும் இவர்கள் கோரும் உதவி செய்ய வேண்டும்' என்று பொதுவாக ஓர் ஓலையும் கோடிக்கரைக் கலங்கரைவிளக்கக் காவலருக்குத் தனியாக ஓர் ஓலையும் கிடைத்தன. இவர்களிடம் கொடுத்து விட்டேன்!" என்றார் வைத்தியர்.

"அப்படியானால் ஏன் தாமதம்? உடனே புறப்பட வேண்டியதுதானே?" என்றாள் இளையபிராட்டி குந்தவை.

"ஆம் புறப்பட வேண்டியது தான்!" என்றான் வந்தியத்தேவன்.

ஆனால் உடனே புறப்பட்டு விடும் காரியம் அவ்வளவு சுலபமாக இல்லை.

மருத்துவசாலையிலிருந்து அவர்கள் வெளியேறி வெளியில் வந்தார்கள். அரசகுமாரிகளை ஏற்றிச் செல்ல அம்பாரி யானை காத்திருந்தது. வந்தியத்தேவனையும் அவனுடைய துணைவனையும் ஏற்றிக் கொண்டு காற்றாகப் பறந்து செல்வதற்கு அரண்மனைக் குதிரைகள் இரண்டு துடிதுடித்துக் கொண்டு நின்றன.

ஆனால் வந்தியத்தேவனுக்குத் திடீர் திடீர் என்று ஏதாவது சந்தேகம் ஏற்பட்டுக் கொண்டிருந்தது. குந்தவைக்கும் புதிது புதிதாக எச்சரிக்கை செய்வதற்கு ஏதேனும் விஷயம் தோன்றிக் கொண்டிருந்தது. போகும் வழியில் அவர்களுக்கு ஏற்படக் கூடிய அபாயங்களைப் பற்றிக் குந்தவை முக்கியமாக எச்சரிக்கை செய்தாள்.

அரசகுமாரிகள் அம்பாரி யானை மீது ஏறிக் கொண்டார்கள். பிறகு வந்தியத்தேவனும் அவனுடைய துணைவனும் குதிரைகள் மீது ஏறினார்கள்.

யானை புறப்படுகிற வழியாகத் தோன்றவில்லை. நெடுந்தூரம் பிரயாணம் போகிறவர்கள்தான் முதலில் புறப்பட வேண்டும் என்று குந்தவை குறிப்பினால் தெரியப்படுத்தினாள்.

வந்தியத்தேவன் மனமின்றித் தயக்கத்துடன் குதிரையைத் திருப்பினான். இன்னும் ஒரு முறை ஆவல் ததும்பிய கண்களுடன் இளவரசியைத் திரும்பிப் பார்த்தான். பிறகு குதிரையின் பேரில் கோபங் கொண்டவன் போல் சுளீர் என்று ஓர் அடி கொடுத்தான். ரோஸம் மிகுந்த அந்தக் குதிரை நாலு கால் பாய்ச்சலில் பியத்துக் கொண்டு பறந்து சென்றது. அவனைத் தொடர்ந்து போவதற்கு வைத்தியரின் புதல்வன் திணற வேண்டியிருந்தது.

யானை திரும்பிச் செல்லத் தொடங்கிய பிறகு குந்தவை சிந்தனையில் ஆழ்ந்தாள்.

(தொடரும்...)





## மனிதனின் வாழ்க்கை

கடவுள் ஒரு நாள் கழுதையை படைத்து அதனிடம் சொன்னார். "நீ ஒரு கழுதை. காலை முதல் மாலை வரைக்கும் நீ உழைக்க வேண்டும். உன் மேல் சுமைகள் இருக்கும். நீ புல் தான் சாப்பிட வேண்டும். உனக்கு அவ்வளவாக அறிவு இருக்காது. நீ 50 வருடங்களுக்கு வாழ்வாய்.

இதற்கு கழுதை சொன்னது "நான் கழுதையாக இருக்கிறேன். ஆனா 50 வருடம் ரொம்ப அதிகம். எனக்கு 20 வருடம்போதும்."

கடவுள் கழுதையின் ஆசையை நிறைவேற்றினார்.

அடுத்து ஒரு நாயை படைத்து அதனிடம் சொன்னார் "நீ மனிதனின் வீட்டை காக்கும் காவலன். அவனுடைய அன்பு தோழனாக இருப்பாய். மனிதன் உண்ட பிறகு உனக்கு கொடுப்பான். நீ 30 வருடங்களுக்கு வாழ்வாய்."



இதற்கு நாய் கூறியது, "கடவுளே, 30 வருஷம் ரொம்ப அதிகம். எனக்கு 15 வருஷம் போதும்"

கடவுள்நாயின்ஆசையை நிறைவேற்றினார்.

அடுத்து கடவுள் குரங்கை படைத்து அதனிடம் சொன்னார் "நீ ஒரு குரங்கு. மரத்திற்கு மரம் தாவ வேண்டும். நீ வித்தைகள் காட்டி மற்றவர்களை மகிழ்விப்பாய். நீ 20 வருடங்களுக்கு வாழ்வாய்."

இதற்கு குரங்கு கூறியது "20 வருஷம் ரொம்ப அதிகம். 10 வருஷம் போதும்" கடவுளும் குரங்கின் ஆசையை நிறைவேற்றினார்.

கடைசியாக மனிதனை படைத்து அவனிடம் சொன்னார் "நீ ஒரு மனிதன். உலகில் உள்ள ஆறு அறிவு ஜீவன் நீ மட்டுமே. உன் அறிவை கொண்டு மற்ற மிருகங்களை ஆட்சி செய்வாய். உலகமே உன் கையில். நீ 20 வருடங்களுக்கு வாழ்வாய்."

இதற்கு மனிதன் கூறினான் "20 வருஷம் ரொம்ப குறைவு. கழுதை வேண்டாம் என்ற 30 வருடங்களையும் நாய் வேண்டாம் என்ற 15 வருடங்களையும் குரங்கு வேண்டாம் என்ற 10 வருடங்களையும் எனக்கு கொடுத்து விடு"

கடவுள் மனிதனின் ஆசையை நிறைவேற்றினான்.

அன்று முதல் மனிதன் முதல் 20 வருடங்களை ஜாலியாக வாழ்கிறான் மனிதனாக.

கல்யாணம் செய்து கொண்டு அடுத்த 30 வருடங்களை கழுதை போல் எல்லாச் சுமைகளை தாங்கி கொண்டு, அல்லும் பகலும் உழைக்கிறான்.

குழந்தைகள் வளர்ந்த பிறகு, அடுத்த 15 வருடங்களுக்கு அவன் வீட்டின் நாயாக இருந்து அனைவரையும் பாதுகாத்து கொள்கிறான். மிச்ச மீதி உள்ளதை சாப்பிடுகிறான்.

வயதான பிறகு குரங்கு போல் 10 வருடங்களுக்கு மகன் வீட்டிலிருந்து மகள் வீட்டிற்கும் மகள் வீட்டிலிருந்து மகன் வீட்டிற்கும் தாவி, தன் பேரக் குழந்தைகளுக்கு வித்தைகள் காட்டி மகிழ்வித்து மரணக்கின்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்தக் காலமும் எமக்குத் துணையாய் நிற்க இறைவனிடம் ஏற்பதாயிருந்தால்,முதலில் வேண்டுவது சமய சாந்தி,இரண்டாவது கல்வியில் சுவை. – ஹெர்ஷல்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## அறநெறிப் பாடசாலைகளை ஆலயங்களில் நடத்துங்கள்

இற்றைக்கு 110 ஆண்டுகளுக்கு முன்னர் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த சுவாமி விவேகானந்தர், இந்த மண்ணில் ஆன்மிக தானம் செய்ய வேண்டும் எனக் கூறியிருந்தார்.

ஆம், மனித வாழ்வு உன்னதமாக அமைவதற்கு ஆன்மிகம் என்பது மிக மிக அவசியமானது.

எனினும் நம் மண்ணில் ஆன்மிகம் என்பது வீழ்ச்சி கண்டுவிட்டதென்பதில் மாற்றுக் கருத்திருக்க முடியாது.

அண்மையில் யாழ்ப்பாண கல்வி வலயத்தின் அதிபர்களுடனான சந்திப்பொன்றின் போது யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிப்பாளர் பொ.இரவிச்சந்திரன் அவர்கள்; மாணவர்களிடம் இறைநம்பிக்கை – இறைவழிபாடு மிகவும் குறைவடைந்துவிட்டது.

இறை நம்பிக்கையும் இறை வழிபாடும் மேலோங்கும் போதுதான் மாணவர்களிடையே ஒழுக்கமும் பண்பாடும் மேலோங்கும் என்ற கருத்தை குறிப்பிட்டிருந்தார்.

குறித்த கலந்துரையாடலில் கருத்துரைத்த வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் ஜோன் குயின்ரஸ் அவர்கள்; வெள்ளிக்கிழமைகளில் மாலை வேளையிலும் ஞாயிற்றுக்கிழமைகளில் முழு நாளும் தனியார் கல்வி நிறுவனங்கள் வகுப்புகளுக்கு விடுமுறை வழங்குவதன் பயனை நாம் அறுவடை செய்ய வேண்டுமாயின், குறித்த நாட்களில் மாணவர்கள் அறநெறிப் பாடசாலைக்குச் செல்வது, வழிபாடுகளில் ஈடுபடுவது பாடசாலை விளையாட்டு மைதானங்களில் பயிற்சிகளைப் பெறுவது என்பன அவசியம் என்ற கருத்தை முன்வைத்திருந்தார்.

ஆக, சமகாலத்தில் நாம் சந்தித்திருக்கக் கூடிய பிறழ்வான நடத்தைகள், போதை வஸ்துப் பயன்பாடுகள் என்பவற்றுக்கு மூல காரணம் அறத்துடன் கூடிய வாழ்வியலை நாம் நம் மாணவர்களுக்குக் கற்றுக் கொடுக்கவில்லை என்பதுதான்.

உண்மையில் இறை நம்பிக்கை, பாவ புண்ணியம் என்ற மெய்யியல் கருத்துக்களை நம் மாணவர்களின் மனங்களில் நிலை நிறுத்தும்போது, நேர்மை, நீதி, ஒழுக்கம், இன்சொல், பிறருக்கு உதவி செய்தல், மற்றவர்களுக்குக் கெடுதி செய்யலாகாது என்ற அறக் கருத்துக்களை அவர்கள் நிச்சயம் பின்பற்றுவர்.

எனவே தற்போது மிகப் பெரும் சவாலாக இருக்கக்கூடிய சமூகப் பிறழ்வில் இருந்து நம் இளம் சமூகத்தை மீட்டு பாதுகாப்பதாக இருந்தால், அதற்கான ஒரே மருந்து இறை நம்பிக்கையை – அறக் கருத்துக்களை – பாவ புண்ணியம் என்ற சிந்தனையை நம் பிள்ளைகளிடம் விதைக்க வேண்டும்.

இதற்காக ஆலயங்கள் தோறும் அறநெறி வகுப்புகளை ஆரம்பித்து மாணவர்களை ஆலயத்துக்கு வரவழைத்து அவர்களை வழிப்படுத்துவது அவசியமாகிறது.

இந்தப் பெரும் பணியை ஆலய அறங்காவலர்கள் செய்தாக வேண்டும்.

தேவையாயின் ஆலயங்கள் கூட்டிணைந்தும் இந்த அறநெறிப் வகுப்புகளை, இறை வழிபாடுகளை நடத்த முடியும்.

இதைச் செய்வதன் மூலம் மிக உன்னத ம[illegible] – உயர்ந்த பண்பாட்டு விழுமியம் கொண்ட இளம் சமூகத்[illegible] நிச்சயம் உருவாக்க முடியும் என்பது நிறுத்ட்டமான உண்மை.

# சுமார் 200 பாடசாலைகள் வடக்கில் மூடப்பட்டுள்ளன

## இலங்கை ஆசிரியர் சங்கம்

(கொழும்பு)

வடக்கு, கிழக்கில் ஆசிரியர் பற்றாக்குறை உக்கிரமடைந்துள்ளதாகவும் வட மாகாணத்தில் மாத்திரம் பல காரணிகளால் சுமார் 200 பாடசாலைகள் தற்போது மூடப்பட்டுள்ளதாகவும் இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

வடக்கு,கிழக்கு மாகாணங்களில் மாத்திரம் சுமார் 4000 ஆசிரியர் பற்றாக்குறை நிலவுவதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பிரதம செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார்.

ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.அவர் மேலும் தெரிவிக்கையில், கிழக்கில் மூதூர் கல்வி வலயத்திற்கு மாத்திரம் 1300 ஆசிரியர்கள்தேவைப் படுகின்றனர்.

வட மாகாணத்தில் போருக்கு பின்னர் பாடசாலைகளை ஆரம்பித்த போது 64 பாடசாலைகள் ஆரம்பிக்கப்படவில்லை எனவும் 200 பாடசாலைகள் வரையில் வட மாகாணத்தில் மூடப்பட்டிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதனிடையே, வட மாகாணத்தின் சில பகுதிகளில் அரச பாடசாலைகள் மூடப்பட்டுள்ளதை அவதானிக்க முடிகிறது.

வவுனியா மாவட்டத்தின் வவுனியா வடக்கு கல்வி வலயத்திற்குட்பட்ட ஓமந்தை இறம்பைக்குளம் நவராஜா வித்தியாலயம், நவ்வி ஸ்ரீ வாணி வித்தியாலயம், நாம்பன்குளம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை ஆகியன தற்போதும் மூடப்பட்டுள்ளதை அவதானிக்க முடிகிறது.

வட மாகாணத்தில் மாத்திரம் 194 பாடசாலைகள் பல்வேறு காரணங்கள் காரணமாக மூடப்பட்டுள்ளதாக அண்மையில் நடைபெற்ற நிகழ்வொன்றில் வட மாகாண ஆளுநர் P.S.M. சார்ள்ஸ் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

# பேராதனை வைத்தியசாலையில் 21 வயது யுவதி உயிரிழப்பு

## தவறான ஊசி போடப்பட்டதாக குற்றச்சாட்டு

(கண்டி)

பேராதனை போதனா வைத்தியசாலைக்கு வயிற்றுவலிக்கு சிகிச்சை பெறச் சென்ற 21 வயதுடைய யுவதியொருவர் உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வயிற்றில் ஏற்பட்ட உபாதைகாரணமாக கடந்த 10 ஆம் திகதி கெட்டப்பிட்டி அரச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக அம்புலன்ஸ் மூலம் பேராதனை போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையிலேயே குறித்த யுவதி உயிரிழந்துள்ளார்.

தவறான ஊசி போடப்பட்டதால் குறித்த உயிரிழப்பு ஏற்பட்டுள்ளதாக குடும்பத்தினர் அறிவித்துள்ள முறைப்பாட்டினையடுத்து, இது தொடர்பில் பேராதனை போதனா வைத்தியசாலை நிர்வாகம் மற்றும் பொலிஸார்விசாரணைகளை ஆரம்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

# ஊழியர் நம்பிக்கை நிதியம் சட்டமூலத்தைத் திருத்துவோம்

## ஹர்ஷ டி சில்வா

(கொழும்பு)

ஊழியர் சேமலாப மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் தொடர்பிலான சட்டமூலத்தில் திருத்தங்களை கொண்டுவர ஐக்கிய மக்கள் சக்தி உத்தேசித்துள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகச் சந்திப்பில் கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்தவகையில் 196 இலட்சம் கணக்குகள் ஊழியர் சேமலாப நிதியத்தில் உள்ளன. இவற்றில் 26 இலட்சம்கணக்குகள்செயல்படும் கணக்குகளாகும்.

மேலும் உள்நாட்டு கடன் மறுசீரமைக்கப்படும் 15 வருட காலப்பகுதியில் அதாவது 2038 ஆம்ஆண்டுவரை இந்த செயல்படும் கணக்குகளுக்கு கிடைக்கும் பிரதிபலன்கள் உரிய வகையில் கிடைப்பதற்கான ஏற்பாடுகளை செய்வதற்காகவே சட்டமூலத்தில்திருத்தங்களை முன்மொழிய தீர்மானித்துள்ளோம் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

# நாட்டின் வருமானத்தை அதிகரிக்கும் யோசனை

## ஜனாதிபதியிடம் கையளிப்பு

நாட்டின்வருமான அதிகரிப்பு தொடர்பான யோசனை நேற்று ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இந்தயோசனை நேற்று ஜனாதிபதி செயலகத்தில் வைத்து ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

இதன்கீழ் மக்களுக்கு அழுத்தம் ஏற்படாத வகையில் நாட்டின் வருமானத்தை அதிகரிப்பது தொடர்பான யோசனையே ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டுள்ளது. (ம-7)

# மல்லாவியில் துப்பாக்கிச்சூடு நால்வருக்கு விளக்கமறியல்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு - மல்லாவி பாலிநகர் துப்பாக்கிச் சூட்டு சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் நால்வரையும் 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பாலிநகரில் இரு குழுக்களுக்கு இடையில் இடம்பெற்ற மோதலில் இளைஞர் ஒருவர் துப்பாக்கியால் சுட்டு கொலை செய்யப்பட்டார்.

மல்லாவி பொலிஸார் - குற்றப்புலனாய்வுத் துறையினர் இணைந்து இந்த கொலைச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர்.

இந்த நிலையில் நான்கு சந்தேகநபர்களை மல்லாவி பொலிஸார் நேற்றுமுன்தினம்கைது செய்திருந்தனர்.

அவர்களில் மூவர் நேற்று முன்தினமும் ஒருவர் நேற்றும் முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்டிருந்தனர்.

சந்தேகநபர்கள் நால்வரையும் எதிர்வரும் 26 ஆம்திகதிவரை 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்க மாவட்ட நீதவான் நீதி மன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த 10ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட இந்த துப்பாக்கிச்சூட்டில் 23 வயதான இளைஞர் ஒருவரே கொலை செய்யப்பட்டார். இந்த கொலைக்கு இடியன் துப்பாக்கி பயன்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (ம-7)

# சுற்றுலாக் கொள்கை இலங்கைக்கு இல்லை

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித்

(கொழும்பு)

இலங்கையில் தேசிய சுற்றுலா கொள்கையொன்று இல்லாதது பாரியதொரு பிரச்சினை என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

தம்புள்ளை பிரதேச சுற்றுலாத்துறையுடன் தொடர்பான பிரதிநிதிகளை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச அலுவலகத்தில் நேற்று முன்தினம் சந்தித்த போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். இதன்போது மேலும் தெரிவித்த அவர்,

சுற்றுலாத் துறைக்கு நியமிக்கப்படும் அமைச்சரினது நியமனம் அமைச்சர்களது ஒரு சில பிரபலங்களுக்கும் அமைமப்பட்ட துறையாக இது இருந்து வருகிறது.

இதில் ஈடுபடும் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முனைவோரை மறந்து, சிறியதொரு பலமிக்க குழுவினரை கோலோச்சும் வேலைத்திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகிறது. இதனை தோற்கடிக்கத் தயார்.

சுற்றுலாக் கொள்கை உருவாக்கம் இடம்பெறும் கேந்திர நிலையங்கள் மற்றும் தொடர்புடைய நிறுவனங்களுடன் சுற்றுலாத் துறையில் ஈடுபடும் நபர்கள் இணைக்கப்பட்டு கொள்கை உருவாக்கும் செயல் முறைக்கு ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் கீழ் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

பிரபல அரசியல் குடும்பத்துடன் தொடர்புடைய சிலர் ரஷ்ய சுற்றுலாப் பயணிகளை மட்டுமே இலக்கு வைத்து தங்கள் சொந்த நலனுக்காக இந் நடவடிக்கைகளை மேற் கொள்வதனால் இது சுற்றுலாத் தொழிலில் ஈடுபட்டுள்ள சாமானிய மக்களுக்கு பெரும்பாரபட்சத்தை ஏற்படுத்துவதாக அவர் தெரிவித்தார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை நாணயத்தின் வரலாறும் அரசியலும் விஜயன் வருகையிலிருந்து

## பொலநறுவை யுகம் முடியும் வரை- பகுதி I

15

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.



### இரண்டாம் உபதீசன் (கி.பி. 521 - 522)

இரண்டாம் உபதீசன் (கி.பி. 521 - 522) என்பவன் இலங்கை மௌரிய மன்னர்கள் வம்சத்துள் ஏழாம் மன்னனாவான். இவன் இலங்கை மௌரிய மன்னர்கள் வம்சத்துள் மூன்றாமானவனான முதலாம் முகலன் என்பவனின் தங்கையை மணந்தவன். மொகல்லானனின் பேரனான கீர்த்தி சேனன் என்பவனைக் கொன்று சிவ மௌரியன் என்ற கீர்த்திசேனனின் தாய்மாமன் அரச கட்டிலில் இவனுக்கு முன்பு ஏறியிருந்தான். தன் பேரனைக் கொன்று அரசேறிய சிவ மௌரியன் என்பவனைக் கொன்றே இந்த உபதீசன் அரசக் கட்டிலில் ஏறினான்.

இந்த உபதீசனின் மகளை மணந்த சிலாகாலன் என்பவன் இவனுடைய ஆட்சியில் இவனுக்கு எதிராக போர் தொடுத்தான். உபதீசன் வயது முதிர்ந்தவன் என்பதால் உபதீசனின் மகனான காசியப்பன் சிலாகாலனை எதிர்த்துப் போரிட்டு மரணமடைந்தான். இதை அறிந்து துயருற்றே மூன்றாம் உபதீசனும் இறந்து விட்டான். அதன் பிறகு சிலாகாலனே இலங்கையை அரசாண்டான்.

### சிலாகாலன் (கி.பி. 522 - 535)

சிலாகாலன் (கி.பி. 522 - 535) என்பவன் இலங்கை மௌரிய மன்னர்கள் வம்சத்துள் எட்டாம் மன்னனாவான். இவன் இலங்கை மௌரிய மன்னர்கள் வம்சத்துள் ஏழாமானவனும் ஆவான். இவனுடைய மூத்த மகனான இரண்டாம் முகலன் என்பவனை கிழக்கிலங்கை நாடுகளுக்கும் இரண்டாம் மகனான தாட்டாபூபதி என்பவனை இலங்கையின் மலைய நாட்டிற்கும் மூன்றாம் மகனான உபதீசனை தன் அரசவையில் முக்கிய அதிகாரியாகவும் தன் அமைச்சனும் வழிப்பறிக் கொள்ளைக்காரனுமான மகாநாகன் என்பவனை உரோகணம் நாட்டிற்கும் அதிபதிகள் ஆக்கினான். இவனுக்குப் பிறகு இவனுடைய 2ஆம் மகனான தாட்டாபூபதி இரண்டாம் முகலனுக்கு சேர வேண்டிய ஆட்சியை பறித்துக் கொண்டு இலங்கையை அரசாண்டான்.

### தாட்டாபூபதி (கி.பி. 535)

தாட்டாபூபதி (535) என்பவன் இலங்கை மௌரிய மன்னர்கள் வம்சத்துள் ஒன்பதாம் மன்னனாவான். இவன் இலங்கை மௌரிய மன்னர்கள் வம்சத்துள் எட்டாமானவனும் தன் தந்தையுமான வனான சிலாகாலன் என்பவனுக்கு பின் அரசக் கட்டிலில் ஏறினான்.

சிலாகாலனுக்குப் பிறகு இவனுடைய இரண்டாம் மகனான இந்த தாட்டாபூபதி இரண்டாம் முகலனுக்கு முறைப்படி சேர வேண்டிய ஆட்சியை பறித்துக் கொண்டு இலங்கையை அரசாண்டான். இதை சிலாகாலனின் இளைய மகனும் தாட்டாபூபதியின் தம்பியுமான உபதீசன் கண்டித்ததால் அவனைத் தாட்டாபூபதி கொன்று விட்டான். இதையறிந்த இரண்டாம் முகலன் கிழக்கிலங்கை நாட்டிலிருந்து படையெடுது வந்தான். இதனால் பெரிய போர் நடந்து பெரும் உயிர்ச்சேதம் நடக்கும் என்பதால் இருவரும் ஒருவரோடு ஒருவர் மட்டும் யானைப் போரில் ஈடுபட்டனர். இதில் தோல்வியை சந்தித்த தாட்டாபூபதி தற்கொலை செய்து கொண்டதால் அதன் பிறகு முறைப்படி இரண்டாம் முகலன் என்ற இவனது தமையனே இலங்கையை அரசாண்டான்.

### இரண்டாம் முகலன் (கி.பி. 535 - 555)

இரண்டாம் முகலன் (கி.பி. 535 - 555) என்பவன் இலங்கை மௌரிய மன்னர்கள் வம்சத்துள் பத்தாம் மன்னனாவான். இவன் இலங்கை மௌரிய மன்னர்கள் வம்சத்துள் ஒன்பதாமானவனும் தன் தம்பியுமானவனான தாட்டாபூபதி என்பவனுக்கு பின் அரசக் கட்டிலில் ஏறினான். இவனுக்குப் பிறகு இவனுடைய மகனான குட்டகீர்த்திமேகன் இலங்கையை அரசாண்டான்.

### குட்டகிர்த்திமேகன் (கி.பி. 555 - 573)

குட்டகீர்த்திமேகன் (555 - 573) என்பவன் இலங்கை மௌரிய மன்னர்கள் வம்சத்துள் பதினோறாம் மன்னனாவான். இவன் இலங்கை மௌரிய மன்னர்கள் வம்சத்துள் பத்தாமானவனும் தன் தந்தையுமானவனான இரண்டாம் முகலனுக்கு பின் அரசக் கட்டிலில் ஏறினான். இந்த கீர்த்திமேகனின் ஆட்சி சரிவர நடக்காததைக் கண்டதும் கீர்த்திமேகனின் பாட்டனான சிலாகாலன் ஆட்சியில் தண்டலதிகாரியாகவும் உரோகண அமைச்சனாகவும் இருந்த மகாநாகன் இவன் மீது படையெடுத்து இவனைக் கொன்று இலங்கையை அரசாண்டான்.

### மகாநாகன் (கி.பி. 573 - 575)

மகாநாகன் (கி.பி. 573 - 575) என்பவன் இலங்கை மௌரிய மன்னர்கள் வம்சத்துள் பன்னிரெண்டாம் மன்னனாவான். இவன் இலங்கை மௌரிய மன்னர்கள் வம்சத்துள் பதினொன்றாமானவனும் தன் தூரத்து முறை பேரனுமானவனான குட்ட கீர்த்திமேகன் என்பவனைக் கொன்று அரசக்கட்டிலில் ஏறினான்.

### முதலாம் அக்கபோதி (கி.பி. 575 - 608)

முதலாம் அக்கபோதி அநுராதபுரத்தை கி.பி 575 தொடக்கம் 608 வரை ஆட்சி செய்தான். இவன் இவனின் சகோதரன் மகாநாகனின் பின்னர் ஆட்சியேறினான். இவனின் பின் இவனது மருமகன் இரண்டாம் அக்கபோதியே ஆட்சிக்கு வந்தான்.

### இரண்டாம் அக்கபோதி (கி.பி. 608 - 618)

இரண்டாம் அக்கபோதி, அநுராதபுரத்தை கி.பி 608 தொடக்கம் 618 வரை ஆட்சி செய்தான். இவன் இவனின் மாமனான முதலாம் அக்கபோதியின் பின்னர் ஆட்சியேறினான். இவனின் பின் இவனது சகோதரன் இரண்டாம் சங்கதீசன் ஆட்சிக்கு வந்தான்.

### இரண்டாம் சங்கதீசன் (கி.பி 618)

இரண்டாம் சங்கதீசன் அநுராதபுரத்தை கி.பி 618 இல் ஆட்சி செய்தான். இவன் இவனின் சகோதரனான இரண்டாம் அக்கபோதியின் பின்னர் ஆட்சியேறினான், இவன் இரண்டு மாதங்கள் மட்டுமே ஆட்சி செய்தான் என்பது குறிப்பிடத்தக்கது. இவனை மூன்றாம் மொகல்லானன் (முகலன்) போரில் வென்று ஆட்சிக்கு வந்தான். தனக்குத் தோல்வி ஏற்பட்டதைக் கண்ட சங்கதீசன் தன் மகனுடன் அருகில் இருந்த காட்டினுள் ஓடி ஒளிந்தான்.

### மூன்றாம் முகலன் (மொகல்லானன்) (கி.பி. 618 - 623)

மூன்றாம் மொகல்லானன் (முகலன்), அநுராதபுரத்தை கி.பி 618 தொடக்கம் 623 வரை ஆட்சி செய்தான். இவன் இவனின் மாமனான இரண்டாம் சங்கதீசனின் பின்னர் ஆட்சியேறினான், இவனின் பின் சிலாமேகவண்ணன் ஆட்சிக்கு வந்தான்.

மொகல்லானனுடைய சேனாபதி சிலாமேகவண்ணன் என்பவன். இவன் அரசனைப் பகைத்து உரோகண நாட்டிற்குப் போய்ச் சேனையொன்றைச் சேர்த்துக் கொண்டு, மலைய நாட்டில் மறைந்திருந்த சேட்டதீசனுடன் (இவன் சங்கதீசனுடைய மகன்) நட்புக் கொண்டு அரசனாகிய மொகல்லானன் மேல் படையெடுத்துச் சென்றான். மொகல்லானன் சிலாமேகவண்ணனைப் போர்க்களத்தில் எதிர்த்தான். ஆனால் போரில் தோற்று ஓடினான். அவனைச் சிலாமேகவண்ணன் கொன்றான்.

### சிலாமேகவண்ணன் (கி.பி. 623 - 632)

சிலாமேக வண்ணன் அநுராதபுரத்தை கி.பி. 623 தொடக்கம் 632 வரை ஆட்சி செய்தான். இவன் மூன்றாம் மொகல்லானனின் பின்னர் ஆட்சியேறினான். இவன் ஒன்பது ஆண்டு அரசாண்டான். கடைசியில் நோய்வாய்ப்பட்டு இறந்தான். இவனுக்குப் பிறகு அக்கபோதி என்பவன் அரசானான். இவனை மூன்றாம் அக்கபோதி என்று கூறுவர். சிறீசங்கபோதி என்றும் இவனுக்குப் பெயர் உண்டு.

### மூன்றாம் அக்கபோதி (கி.பி 632)

மூன்றாம் அக்கபோதி என்பவன் கி.பி 632 இல் அநுராதபுர இராசதானியை ஆட்சி (6 மாதங்கள்) செய்தான். அக்கபோதிக்கு மானா என்னும் பெயருள்ள தம்பியொருவன் இருந்தான். அக்கபோதி, மானாவைத் துணைவேந்தனாக்கி அவனைத் திக்கிண தேசத்திற்கு அரசனாக்கினான். அக்கபோதி நெடுங்காலம் அரசாளவில்லை. அவன் அரசாட்சிக்கு வந்த ஆறாவது மாதத்தில், மலைநாட்டில் ஒதுங்கியிருந்த சேட்டதீஸன் (சங்கதீசனுடைய மகன்) சேனையொன்றைத் திரட்டிக் கொண்டு தாட்டாசிவன் என்னும் அமைச்சனுடன் அநுராதபுரத்தின் மேல் படையெடுத்து வந்தான். அக்கபோதி, சேட்டதீசனுடன் போர் செய்து தோற்றான். தோற்று மாறுவேடம் பூண்டு தமிழ்நாட்டில் அடைக்கலம் புகுந்தான்.

### மூன்றாம் சேட்டதீசன் (கி.பி. 632)

மூன்றாம் சேட்டதீசன் என்பவன் அநுராதபுர இராசதானியை 632 ஆம் ஆண்டு ஆட்சி செய்தான். இவன் மூன்றாம் அக்கபோதியின் பின்னர் ஆட்சிபீடம் ஏறினான். இவனும் நெடுங்காலம் அரசாளவில்லை. ஏனென்றால், போரில் தோற்றுத் தமிழ்நாட்டிற்கு ஓடிய அக்கபோதி தமிழச் சேனையொன்றைத் திரட்டிக் கொண்டு இலங்கைக்கு வந்து சேட்டதீஸனை எதிர்த்தான்.

இவன் அழைத்து வந்த தமிழப் படையின் தலைவன் வெலுப்பன் என்பவன். வெலுப்பன் என்பது வேலப்பன் என்பதன் திரிபாக இருக்கக் கூடும். இவனது தந்தை இரண்டாம் சங்கதீசன் ஆவான்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## விபரீத...

விதை உட்கொண்ட பிரஸ்தாபப் பெண்ணை உறவினர்கள் மீட்டு சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சேர்ப்பித்த போதிலும் அவர் வைத்தியசாலையில் அனுமதித்த சில மணி நேரங்களில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

மறவன்புலோ பகுதியைச் சேர்ந்த 24 வயதான இரண்டு வயதுக் குழந்தையின் தாயொருவரே இவ்வாறு விபரீத முடிவெடுத்து உயிரிழந்துள்ளார்.

மேற்படி மரணம் குறித்த மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-7,30)

## விவசாயிகளை...

தினேஷ் குணவர்தனவால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாடு கடுமையான பொருளாதார சிக்கலில் இருந்து இன்று மீண்டு எழுந்துள்ளமைக்கு முக்கிய காரணம் விவசாயமும் விவசாயிகளின் முயற்சியுமே எனத் தெரிவித்த அவர், நாட்டை பொருளாதார ரீதியாக கட்டியெழுப்புவதற்கான விசேட இலக்குகளை நிறைவேற்ற வேண்டும் எனவும் தெரிவித்தார்.

மேலும், அரசாங்கம் என்ற வகையில் நாட்டை சிக்கலான நிலையில் இருந்து இயல்பான நிலைக்கு மாற்றியமைக்க சிறு மற்றும் நடுத்தர தொழில்களுக்கு ஆதரவளிப்பதுடன், பொதுச் சந்தைக்கு வழங்கக் கூடிய நிவாரணங்களை உருவாக்குவது இன்றியமையாதது எனக் குறிப்பிட்டார்.

நாட்டை மீண்டும் கட்டியெழுப்ப சர்வதேச நாடுகளுடன் கடன் மறுசீரமைப்பு ஒப்பந்தங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

இருப்பினும் மக்கள் உணர்ச்சியுடன் நடந்து கொள்ள வேண்டும் எனவும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில், பாராளுமன்ற உறுப்பினர் யாதாமினி குணவர்தன, கொழும்பு மாவட்ட செயலாளர் கே.ஜி.விஜேசிறி, சீதாவக்க மற்றும் பாதுக்க பிரதேச செயலாளர்கள் மற்றும் விவசாயிகள் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர். (ம-7)

## யாழிலிருந்து...

மாதம் 09ஆம் திகதி வவுனியா தலைமைப் பொலிஸ் நிலையத்திற்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து, வவுனியா பொலிஸ் நிலைய பொலிஸ் பரிசோதகர் ராஜபக்ஷ தலைமையில் பொலிஸார், அன்றைய தினம் இரவு 8.30 மணியளவில் வவுனியா பழைய பஸ் நிலையம் முன்பாக யாழில் இருந்து கொழும்பு நோக்கிச் சென்ற பஸ்களை சோதனையிட்டனர்.

இதன்போது பஸ் ஒன்றில் பயணித்த குடும்பஸ்தரின் உடைமையில் வைத்திருந்த பை ஒன்றில் இருந்து ஹெரோயின் போதைப்பொருள் கண்டு பிடிக்கப்பட்டது.

இதனையடுத்து ஹெரோயின் போதைப்பொருள் பொலிஸாரால் மீட்கப்பட்டதுடன், அதனை உடைமையில் வைத்திருந்த குடும்பஸ்தரும் கைது செய்யப்பட்டிருந்தார்.

மீட்கப்பட்ட ஹெரோயின் போதைப் பொருள் ஒரு கிலோ 135 கிராம் நிறை உடையது என்பதுடன், கலப்படம் அற்ற தூய ஹெரோயின் என்பதும் பொலிஸ் விசாரணை மற்றும் சோதனைகளில் தெரியவந்தது.

இதனையடுத்து, குறித்த நபர் கைது செய்யப்பட்டு வவுனியா நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு வழக்கு விசாரணைகள் இடம்பெற்று விளக்கமறியலில் இருந்து பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார்.

ஒரு கிலோ 135 கிராம் தூய ஹெரோயினை உடைமையில் வைத்திருந்தமை மற்றும் விற்பனைக்காக கொண்டு சென்றமை தொடர்பில் சட்டமா அதிபர் திணைக்களத்தால் வவுனியா மேல் நீதிமன்றில் வழக்கு தொடுக்கப்பட்டு, அரச சட்டத்தரணிகளான தர்சிகா திருக்குமாரன் மற்றும் ஆறுமுகம் தனுஜன் ஆகியோரின் நெறிப்படுத்தலில் வழக்கு விசாரணைகள் இடம்பெற்று வந்தது.

குறித்த வழக்கு விசாரணைகளில் குறித்த நபர் ஒரு கிலோ 135 கிராம் தூய ஹெரோயினை உடைமையில் வைத்திருந்தமை மற்றும் விற்பனைக்காக எடுத்து சென்றமை என்பன எந்த வித சந்தேகத்திற்கு இடமின்றி உறுதிப்படுத்தப்பட்டமையால் குறித்த நபருக்கு வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் மரண தண்டனை வழங்கி நேற்று தீர்ப்பளித்தார். (ம-7)

## யாழ்.பல்கலைக்...

புள்ளிகள் என்றவாறு பெற்றுக் கொண்டனர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் தற்போதைய துணைவேந்தரின் பதவிக்காலம் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 28ஆம் திகதியுடன் நிறைவடையவுள்ள நிலையில் அடுத்த துணைவேந்தர் பதவிக்காக விண்ணப்பித்திருந்த நான்கு பேரில், திறமைப் புள்ளி அடிப்படையில் இத்தெரிவு இடம் பெற்றது.

பல்கலைக்கழகங்களில் துணைவேந்தரை நியமிப்பதற்கான சுற்றுநிருபத்துக்கு அமைவாகத் துணைவேந்தர் பதவிக்காக விண்ணப்பித்திருந்தவர்களின் தகுதிகளின் அடிப்படையில் திறமைப் புள்ளியிடலுக்காகப் பல்கலைக்கழகப் பேரவை நேற்றுக் காலை ஒன்றுகூடியது.

இதன்போது, துணைவேந்தர் பதவிக்காக விண்ணப்பித்திருந்த தற்போதைய துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறீசற்குணராஜா, வணிகபீடத்தின் முன்னாள் பீடாதிபதியும் சிரேஷ்ட பேராசிரியருமான தி.வேல்நம்பி, உயர் பட்டப்படிப்புகள் பீடாதிபதி பேராசிரியர் செ.கண்ணதாசன் மற்றும் கிழக்குப் பல்கலைக்கழக விலங்கியல் துறைப் பேராசிரியர் பி.வினோபாபா ஆகிய நால்வரும் பேரவை உறுப்பினர்கள் முன்பாக தமது விதப்புரைகளை முன் வைத்தனர்.

சுற்றுநிருபத்தில் வரையறுக்கப்பட்ட புள்ளித் திட்டத்துக்கமைய ஒவ்வொரு பேரவை உறுப்பினர்களும் தனித் தனியாகப் புள்ளிகளை வழங்கியுள்ள நிலையில் புள்ளிகளின் அடிப்படையில் முதல் மூன்று இடங்களையும் முறையே பேராசிரியர் சி.சிறீசற்குணராஜா, பேராசிரியர் தி. வேல்நம்பி, பேராசிரியர் செ.கண்ணதாசன் ஆகியோர் பெற்றுக் கொண்டுள்ளனர்.

இதனடிப்படையில், பேரவையின் பரிந்துரை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் கல்வி அமைச்சின் ஊடாக ஜனாதிபதி செயலகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதனை அடுத்து 1978 யாப்பின்படி 16 ஆம் இலக்க பல்கலைக்கழகச் சட்டத்துக்கு அமைவாக பல்கலைக்கழகப் பேரவையினால் பரிந்துரைக்கப்பட்டுள்ள மூன்று பேரில் ஒருவரைத் துணைவேந்தராக ஜனாதிபதி அறிவிப்பார். (ம-7,33)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்.- கொழும்பு...

ஆரம்பிக்கப்படும் என ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன்படி, கொழும்பு கோட்டையிலிருந்து காங்கேசந்துறை வரையிலான ரயில் சேவைகள் வழமையான நேர அட்டவணைப்படி மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளன.

அநுராதபுரத்துக்கும் ஓமந்தைக்கும் இடையிலான ரயில் பாதையிலான போக்குவரத்து கடந்த ஜனவரி மாதம் வீதி புனரமைப்பு பணிகளுக்காக மூடப்பட்டிருந்தது.

இந்திய கடன் உதவியின் கீழ் 62 கிலோ மீற்றர் தூரம் சீரசெய்யப்பட்டு 33 பில்லியன் ரூபா செலவிடப்பட்டது.

இந்தப் பாதை மூலம் மணிக்கு 100 கிலோ மீற்றர் வேகத்தில் ரயில்களை இயக்க முடியும் என ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணம் - கொழும்பு ரயில்களுக்கான ஆசன முன்பதிவு சேவையும் மீண்டும் ஆரம்பிக்கப்படும் என ரயில்வே திணைக்களம் அறிவித்துள்ளது. (ம-7)

தன நிதானய
திகதி - 2023.07.12
சீட்டிழுப்பு இலக்கம் - 1203
T 17 25 43 63 T

கொவிசெத
திகதி 2023.07.12
சீட்டிழுப்பு இலக்கம் 3415
A 07 10 22 59
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 12/07/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1521
C 20 18 36 41 79

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.07.12
சீட்டிழுப்பு இலக்கம் 482
கன்னி 18 41 56 59 கன்னி

மஹஜன சம்பத
திகதி 2023/07/12
சீட்டிழுப்பு இலக்கம் 5173
N 0 9 4 2 3 9

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2147 வர்ணம் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 2023.07.12 தினம் புதன்கிழமை
05 26 38 55 H
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 54,748,692.40
06 21 22 71 E

சனிதா
திகதி 2023.07.12 வெற்றி வாரம் 4308
08 35 45 53 M
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.50,779,688.00
06 32 39 64 R

ராசி
சீட்டிழுப்பு வாரம் 3859 வர்ணம் பச்சை
சீட்டிழுப்பு திகதி 2023.07.12 தினம் புதன்கிழமை
10 13 24 39
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 3,806,324/-
44 45 50 57

கப்றுக
திகதி 2023.07.12 வெற்றி வாரம் 1323
U 30 27 29 64 70
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 415,947,664.20
01 06 33 66 B
DLB தொலை பேசி: 011-2 333 546-47 Web: www.dlb.lk

ஜயோதா
திகதி 2023.07.12 வெற்றி வாரம் 1938 வர்ணம் மஞ்சள்
23 40 46 53 Z
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.44,811,135.20
06 10 45 67 E

ADA KOTIPATHI
புதன்கிழமை
வெற்றி வாரம்: 1973
வர்ணம்: ரோஸ்
சீட்டிழுப்பு திகதி: 2023.07.12
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.56,897,758/-
07 15 17 66 P
04 11 21 69 D

## பாரதப் பிரதமருக்...

விரைவில் இந்தியாவிற்கு விஜயம் செய்யவுள்ள நிலையில் இந்திய அரசாங்கம் தமிழர் தரப்பு விடயங்கள் தொடர்பில் இலங்கை அரசாங்கத்துக்கு அழுத்தம் வழங்க வேண்டும் என்பதை வலியுறுத்தி குறித்த கடிதம் தயாரிக்கப்பட்டுள்ளது.

நான்கு கட்சிகளின் தலைவர்கள் யாழ்ப்பாணத்தில் ஈ.பி.ஆர்.எல்.எப். தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரனின் இல்லத்தில் நேற்று குறித்த கடிதத்தில் கையொப்பமிட்டனர்.

குறித்த கடிதத்தில் தமிழ் மக்கள் கூட்டணி சார்பில் பாராளுமன்ற உறுப்பினர் க.வி.விக்னேஸ்வரனும் புளொட் சார்பில் பாராளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தனும் ஈ.பி.ஆர்.எல்.எப். சார்பில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரனும் ஜனநாயக போராளிகள் கட்சி சார்பில் வேந்தனும் கையொப்பமிட்டனர்.

மேலும் ரெலோவின் சார்பில் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனிடமும் தமிழ் தேசிய கட்சி சார்பில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஸ்ரீகாந்தாவும் கையொப்பமிட்ட பின்னர் குறித்த கடிதம் இன்றைய தினம் வியாழக்கிழமை இலங்கைக்கான இந்திய தூதரிடம் கையளிக்கப்படவுள்ளது.

குறித்த கடிதத்தில் இந்திய இலங்கை ஒப்பந்தம் பிரகாரம் கொண்டுவரப்பட்ட 13ம் திருத்தம் முழுமையாக நடைமுறைப் படுத்தப்பட வேண்டும் என்பதுடன் வடக்கு கிழக்கு மாகாண சபைகளுக்கான தேர்தல் நடாத்தப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளதாக ஈ.பி.ஆர்.எல்.எப். தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சி தனியாக இந்திய பிரதமருக்கு கடிதம் ஒன்றை அனுப்பவுள்ள நிலையில் தமிழ் தேசிய மக்கள் முன்னணி ஏற்கனவே கடிதத்தை இந்திய துணைத்தூதர் ஊடாக இந்தியப் பிரதமருக்கு அனுப்பியுள்ளது.(ம-7,33,104)

## கடற்படையே...

இப்போராட்டம் மண்டைதீவு - கடற்படை முகாமிற்கு அருகில் நேற்று காலை முன்னெடுக்கப்பட்டது.

வேலணைப் பிரதேச செயலாளர் பிரிவின், மண்டைதீவு கிழக்கில் ஜே/07 கிராம சேவகர் பிரிவில் உள்ள, 29 பேருக்குச் சொந்தமான 18 ஏக்கருக்கும் அதிகமான தனியார் காணிகளை, வெலிசுமன கடற்படை முகாம் அமைப்பதற்காக சுவீகரிக்கும் நோக்கில், நேற்று அளவீட்டுப் பணிகளை ஆரம்பிக்கப்போவதாக நில அளவைத் திணைக்களத்தினால் உத்தியோகப்பூர்வமாக அறிவிக்கப்பட்டது.

இந்த அளவீட்டுப் பணிகளைத் தடுத்து நிறுத்துவதற்காக, மக்கள் பிரதிநிதிகள், காணி உரிமையாளர்கள், சமூக ஆர்வலர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினரையும் நேற்று காலை.7.30 மணியளவில் மண்டைதீவு கிழக்கில் நடைபெறவுள்ள எதிர்ப்புப் போராட்டத்தில் இணைந்துகொள்ளுமாறு பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் அழைப்பு விடுத்திருந்தார்.

இதன்படி போராட்டம் முன்னெடுக்கப் பட்டது. இதன்போது கடற்படை முகாம் முன்பாக பொலிஸார் கடற்படையினர் மற்றும் புலனாய்வாளர்கள் குவிக்கப்பட்டு இருந்தனர். கலகமடக்கும் கடற்படையினர் தயார் நிலையில் இருந்ததுடன் கடற்படையினர் போராட்டகாரர்களை அச்சுறுத்தும் வகையில் புகைப்படங்கள் மற்றும் காணொளிகளை எடுத்து கொண்டிருந்தனர்.

போராட்டத்தின் நிறைவில் போராட்டகாரர்களுக்கு பிஸ்கட் குளிர்பானம் வழங்க வந்த கடற்படையினருக்கு பொது மக்கள் கோஷம் எழுப்பி கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

இதன்போது "எங்கட காணியை விட்டு எழும்பி போங்கோ பிஸ்கட் சாப்பிடுவோம்" என கடற்படை அதிகாரியை பார்த்து காணி உரிமையாளர் பேசியுள்ளார். போராட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் மாகாண சபை உறுப்பினர்கள், முன்னாள் உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள், காணி உரிமையாளர்கள், பொது மக்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

(ம-7,33, 104)

## பெறுமதியான...

மற்றும் மருந்துப் பொருட்களை சுகாதார அமைச்சிடம் நேற்று கையளித்துள்ளார்.

சுமார் 53.03 மில்லியன் டொலர் பெறுமதியான இந்த மருந்துப் பொருட்கள் சுகாதார் அமைச்சர் கெஹலியரம் புக்வெல்லவிடம் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

கையளிக்கப்பட்ட மருந்துகளில் குழந்தை பருவ தோல் நோய்கள், மூட்டுவலி மற்றும் புற்றுநோய்க்கான 16 வகையான மருந்துகள் உள்ளடங்குவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## பிஸ்கட், குளிர்...

மண்டைதீவில் காணி சுவீகரிப்புக்கு எதிராக போராடிய பொதுமக்களுக்கு கடற்படை பிஸ்கட், குளிர்பானம் வழங்கவந்த நிலையில் அதனை பொதுமக்கள் வாங்க மறுத்துள்ளனர்.

யாழ்ப்பாணம் மண்டைதீவில் உள்ள கடற்படை முகாமுக்காக 29 பேருக்கு சொந்தமான 18 ஏக்கர் காணியை சுவீகரிப்பதற்கு காணி அளவீடு செய்ய நில அளவை திணைக்களம் நேற்றைய தினம் புதன்கிழமை நடவடிக்கை எடுத்த போது, குறித்த கடற்படை முகாமிற்கு முன்பாக காணி உரிமையாளர்கள், அரசியல்வாதிகள் உள்ளிட்டோர் ஒன்று கூடி எதிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டம் காரணமாக நில அளவை திணைக்களத்தினர் தமது பணியை முன்னெடுக்காது, திரும்பி சென்றனர்.

அதனை அடுத்து போராட்டம் முடிவுக்கு வந்த போது, தமது முகாமிற்கு முன்பாக போராடிய மக்களுக்கு பிஸ்கட் மற்றும் குளிர்பானங்களை கடற்படையினர் வழங்க முன்வந்தனர்.

அதற்கு மக்கள், " எங்கள் காணிகளை சுவீகரித்துக்கொண்டு எமக்கு பிஸ்கட் தருகிறீர்களா? எங்கள் காணிகளை எங்களிடம் கையளித்து விட்டு செல்லுங்கள். எங்களுக்கு பிஸ்கட் தந்து எங்கள் காணிகளை பறிக்காதீர்கள் என கூறி அவற்றை வாங்க மறுத்தனர்.

(ம-7,33,104)


பாதுகாப்பு உத்தியோகத்தர் தேவை

யாழ். நகரில் இயங்கும் நிறுவனம் ஒன்றுக்கு பகல் நேர பாதுகாப்பு உத்தியோகத்தர் தேவை.
வயது : 30 - 65
(யாழ். நகருக்கு அண்மையில் இருப்பவர்களுக்கு முன்னுரிமை)
தொடர்புகளுக்கு
076 097 3121

VILLAGE HOTEL JAFFNA EXPRESS
யாழ் - கொழும்பு பஸ் சேவை
AIRPORT PICK UP DROP SERVICE
அன்னை முத்துமாரி பஸ் சேவை
இனி வரும் காலங்களில்
VILLAGE HOTEL எனும் பெயரில்...

கட்டணம் - 2800/=
(16033)
T.P:077 544 8503

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்
ஆகாஸ் நகை மாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (16222)
076 825 7716 (ஆகாஸ்)

YGC ACCELERATOR
அணி-07

நீங்கள் ஒரு முயற்சியாண்மையாளரா ? உங்கள் ஆரம்ப நிலை அல்லது வளர்ச்சிப்படி நிலையில் உள்ள வர்த்தகத்தை விரைவுபடுத்த ஆர்வமாக உள்ளீர்களா?
YGC ACCELERATOR உங்களுக்கானது!

YGC ACCELERATOR மூலம் நீங்கள் பெறக்கூடிய நன்மைகள்
- உங்களின் வியாபாரம் தொடர்பான துறையில் சாதித்த முயற்சியாண்மையாளரின் வழிகாட்டல்
- Yarl IT Hub இன் வலையமைப்பில் இணைவதனூடாக பலரின் அறிமுகத்தை பெறவும் உங்கள் வியாபாரத்தை பல்வேறு கோணங்களிலும் விரிவுபடுத்தும் வாய்ப்பு
- உங்கள் வியாபாரத்தை ஆரம்பிப்பதற்கும் விரிவுபடுத்துவதற்கும் அவசியமான ஒரு கணிசமான தொகையைப் பெறும் வாய்ப்பு
- வியாபாரத்தின் வளர்ச்சிக்கு அவசியமான பல்வேறு அம்சங்கள் தொடர்பான தொடர் பயிற்சி வாய்ப்புகள்
- ஆறுமாத கால முடிவில் உங்கள் வியாபாரத்தினை உலகெங்கிலும் பரந்து வாழும் பெரிய முதலீட்டாளர்களின் முன் அளிக்கை செய்யும் வாய்ப்பு

YGC ACCELERATOR இன் ஏழாவது அணியை உள்ளெடுப்பதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.இதுவரை 40 துக்கும் மேற்பட்ட வியாபாரங்கள் பயன் பெற்று தமது வியாபாரத்தினை சர்வதேச ரீதியில் விரிவுபடுத்தியுள்ளனர்

விண்ணப்பப் படிவம்
https://www.yarlithub.org/ygc-accelerator/
ஜுலை 15 ஆம் திகதிக்கு முன்னதாக விண்ணப்பிக்குக
(16279)
மேலதிக விபரங்களுக்கு
www.yarlithub.org | +94 76 767 3158 | event@yarlithub.org

VISA விண்ணப்பங்கள்
அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள்,ஆலோசனைகள்
✔ONLINE APPLICATIONS
✔VISA APPOINTMENTS
✔PASSPORT APPLICATION
✔POLICE CLEARANCE
என அனைத்து விதமான விசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும்.
STUDENT VISA • TOURIST VISA • SPOUSE VISA • SUPER VISA
கனடா ஐரோப்பா ஜெர்மனி பிரான்ஸ் லண்டன் சுவிஸ் அமெரிக்கா
Srilankan Visa Extension வெளிநாட்டு Passport களுக்கு இலங்கை விசா நீடித்து தரப்படும்
(C-6906)
COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A,சப்பல் லேன், யாழ்ப்பாணம். V2 TRAVELS
0777-068-777

உடனடி வேலை வாய்ப்பு
நிர்வாக உத்தியோகத்தர்

விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
V2 TRAVELS
எமது கிளைகள்
• கிளிநொச்சி • சுன்னாகம்
• சாவகச்சேரி • மானிப்பாய்
• நெல்லியடி • பருத்தித்துறை
• திருகோணமலை • வல்வெட்டித்துறை
• கோப்பாய் • புத்தூர்
• பண்டத்தரிப்பு • சங்கானை
• கொழும்பு (C-6906)
வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com


## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 13.06.2023 செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தெய்வம்

### அமரர் சின்னத்தம்பி சந்திரலிங்கம்

அவர்களின் சிவபதப்பேறு குறித்த அந்தியேட்டிக் கிரியைகள் இன்று 13.07.2023 வியாழக்கிழமை காலை 6.30 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும் அன்றைய தினமே அன்னாரின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் அவரின் இல்லத்தில் நடைபெறும். 14.07.2023 வெள்ளிக்கிழமை 12.00 மணியளவில் **அன்னாரின் இல்லத்தில்** நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்**

பெரியாவோடை, வித்தகபுரம்,
[illegible]. (16280)

இங்ஙனம் : குடும்பத்தினர்
தொ.இல : 077 704 9650

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தால் [illegible] முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 13.07.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org